E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்
2023 ஜனவரி 21 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

1932 - 2022

வரு. 91 இல. 18 | 12 பக்கங்கள் | Saturday 21, January, 2023

## 12 அத்தியாவசிய பொருட்களின் விலைகள் சதொசவில் குறைப்பு

### வியாழன் நள்ளிரவு முதல் அமுலாகியது



சதொச விற்பனை நிலையத்தினால் 12 அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் இந்த விலைகுறைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைய ஒரு கிலோ கிராம் பெரிய 06

## இலங்கை–இந்திய நாடுகளுக்கிடையே கூட்டு வேலைத்திட்டம்

# பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வுகாண இந்தியா அனைத்து உதவிகளையும் வழங்கும்

### ஜனாதிபதி ரணிலுடனான சந்திப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி

**கடன் மறுசீரமைப்பு குறித்தும் இந்திய அரசிடமிருந்து சாதகமான பதில்**

இலங்கை இன்று எதிர்நோக்கியுள்ள நிலைமையை இந்தியா நன்கு புரிந்துகொண்டுள்ளதாக சுட்டிக்காட்டிய இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெயசங்கர், இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு இந்திய அரசாங்கம் அனைத்து உதவிகளையும் வழங்குமென்றும் நேற்று தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்





High Impact Community Development Project வரையறைகளை நீடிப்பது தொடர்பான இருதரப்பு ஒப்பந்தமும் கைச்சாத்து

துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுக் காலை சந்தித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பின் போது, இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு ஜனாதிபதி மகத்தான வரவேற்பளித்தார். இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் கூட்டு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் இதன்போது உடன்பாடு எட்டப்பட்டது.

இருவருக்குமிடையிலான உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக இந்திய வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கொழும்பு, பெஜட் வீதியிலுள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ 06

## அரசியலமைப்பு சபைக்கு மூன்று பேர் நியமனம்

அரசியலமைப்பு சபையின் உறுப்பினர்களாக மூன்றுபேரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

கலாநிதி பிரதாப் இராமானுஜம், கலாநிதி திருமதி தில்குஷி அனுலா விஜேசுந்தரே மற்றும் கலாநிதி திருமதி வெலிகம விதான ஆராச்சிகே தினேஷா சமரரத்ன ஆகியோரையே மூன்று வருட காலத்துக்கு அரசியலமைப்பு சபையின் உறுப்பினர்களாக ஜனாதிபதி நியமித்துள்ளார்.

## இந்தியாவின் உணர்வுபூர்வமான ஒத்துழைப்புகள் அவசியம்

**இந்திய மீனவர்களின் எல்லை தாண்டும் நடவடிக்கை நிறுத்தப்படவும் வேண்டும்**

### அமைச்சர் டக்ளஸ் இந்திய வெளியுறவு அமைச்சரிடம் வேண்டுகோள்



இலங்கையின் கடல் வளத்துக்கும், இலங்கை கடற்றொழிலாளர்களுக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ள, இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் செயற்பாடுகளை முழுமையாக கட்டுப்படுத்த வேண்டுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய வெளியுறவு 06

## அரச மரியாதையுடன்

## சுமித்ரா பீரிஸின் இறுதிக் கிரியை இன்று

### SLRC, SLBC யில் நேரடி ஒளி/ஒலிபரப்பு



மறைந்த பிரபல சிங்கள திரைப்பட இயக்குநரும் தயாரிப்பாளருமான கலாநிதி சுமித்ரா பீரிஸின் இறுதிக்கிரியைகள் இன்று (21) மாலை 4.00 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அரச மரியாதைகளுடன் நடைபெறுமென பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06

IMF உத்தரவாதம், வழங்கும் உதவிகள்

## இந்தியாவுக்கு நன்றி தெரிவித்தார் அலிசப்ரி



இந்தியா வழங்கிய உதவிகள் மற்றும் சர்வதேச நாணயநிதியத்திற்கான உத்தரவாதம் ஆகியவற்றிற்காக இலங்கை நன்றி தெரிவித்துள்ளது. 06

## தேர்தலை நடத்துவதால் பொருளாதார நிலை மேலும் சிக்கலுக்குள்ளாகும்



### நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த எச்சரிக்கை

தேர்தல் ஒன்றை நடத்துவதால், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையக்கூடும் என நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உயர் நீதிமன்றத்திற்கு அறியப்படுத்தியுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை கைவிடுவதற்கான உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி ஓய்வுபெற்ற இராணுவ கேர்ணல் ஒருவர் தாக்கல் செய்த 06

தேர்தல் தொடர்பில் முறைப்பாடுகளா?

## தேசிய முறைப்பாட்டு நிலையத்தில் முறைப்பாடு செய்ய ஏற்பாடு



### தேர்தல் செயலகத்தில் புதிய நிலையம் திறப்பு

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்காக "தேசிய தேர்தல் முறைப்பாடு முகாமைத்துவ நிலையம்" ஒன்றை நிறுவியுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 06

## 10,000 இந்திய வீட்டுத்திட்டத்தை விரைவுபடுத்துமாறு கோரிக்கை

### ஜெய்சங்கரை சந்தித்த CWC தரப்பு முன்வைப்பு



தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் ஊடாக நிர்மாணிக்கவிருக்கும் பத்தாயிரம் இந்திய வீட்டுத்திட்டத்தை விரைவுப்படுத்த, மாற்று பொறிமுறை ஒன்று முன்னெடுக்க வேண்டும் என தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் நீர்வழங்கல் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரிடம் கோரிக்கை விடுத்தார். 06



**IMFஇன் உதவிகளை பெற அமெரிக்கா ஒத்துழைக்கும்** 03

டுவிட்டரில் அமெரிக்க தூதுவர் பதிவு



**ஜெய்சங்கரிடம் பல்வேறு கோரிக்கைகள் முன்வைப்பு** 03

தமுகூ சார்பில் மனோMP கருத்து



**அடுத்த மூன்று தினங்களுக்குள் முட்டைக்கான விலை சூத்திரம்** 03

கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் தெரிவிப்பு

## தராசு சின்னத்தில் களமிறங்கும் மலையக அரசியல் அரங்கம்

### முன்னாள் MP திலகராஜா தெரிவிப்பு

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் தராசு சின்னத்தில் மலையக அரசியல் அரங்கம் களமிறங்கவுள்ளதாக அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற 06

## நானுஓயா பஸ் விபத்து 7 பேர் பலி, 51 பேர் காயம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நுவரெலியா நானுஓயா பகுதியில் நேற்று இரவு இடம்பெற்றுள்ள வாகன விபத்தில் ஏழு பேர் பலியாகியுள்ளதுடன் 51 பேர் காயமுற்றுள்ளதாக 06

## மன்னாரில் எமக்கே அதிகளவு சபைகள்

### மக்கள் காங்கிரஸ் தலைவர் நம்பிக்கை



உள்ளூராட்சி தேர்தலில் இம்முறை மன்னார் மாவட்டத்தில் நாம் அதிக ஆசனங்களையும் சபைகளையும் கைப்பற்றுவதற்கு மக்கள் உறுதுணையாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றோம் என 06

## முஜிபுர் ரஹ்மானின் இடத்திற்கு AHM பௌசி?

### நியமிக்கப்படவுள்ளதாக தகவல் கசிவு



ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து முஜிபுர் ரஹ்மான் விலகியதை அடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி நியமிக்கப்பட உள்ளதாக தெரியவருகிறது. 06

## மண்டைதீவு கடலில் 989 kg மஞ்சள் மூடைகள் மீட்பு

### கடற்படை அதிரடி; நால்வர் சந்தேகத்தில் கைது



யாழ்ப்பாணம், குருநகர் மற்றும் மண்டைதீவு கடற்பரப்பில் சுமார் 989 கிலோ விரலி மஞ்சள் மூடைகளை இலங்கை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கடற்படையினர் (19) மேற்கொண்ட தனித்தனியான தேடுதல் நடவடிக்கைகளின் போதே மஞ்சள் மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த தேடுதல் நடவடிக்கைகளின் மூலம் மோசடிகளுடன் தொடர்புடைய 04 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்பரப்புகளின் ஊடுருவலைத் தடுக்க தீவின் கரையோரப் பகுதிகளில் வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை 06

# சர்வதேச செய்திகள்

## மேற்கத்திய கனரக ஆயுதங்களால் உக்ரைன் போர் தீவிரம் அடையும்




உக்ரைனுக்கு போர் டாங்கிகள் மற்றும் நீண்ட தூர ஏவுகணை அமைப்புகள் போன்ற கனரக ஆயுதங்களை நேட்டோ வழங்கினால் போர் “மிக ஆபத்தான” கட்டத்திற்கு விரிவடையும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது.

ரஷ்யாவுடனான தாக்குதல்களை தீவிரப்படுத்தும் வகையில் உக்ரைனுக்கு மேலும் சக்திவாய்ந்த இராணுவ உபகரணங்களை வழங்குவதற்கு மேற்குலக நாடுகள் உறுதி அளித்திருக்கும் நிலையிலேயே ரஷ்யா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இதில் கவச வாகனங்கள் மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகள் உட்பட 2.5 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்க அமெரிக்கா உறுதி அளித்துள்ளது. பல நூறு ஏவுகணைகள் உட்பட ஆயுதங்களை வழங்க பல ஐரோப்பிய நாடுகள் உறுதி அளித்துள்ளன.

குறிப்பாக உக்ரைனுக்கு போர் டாங்கிகளை வழங்க ஜெர்மனிக்கு அழுத்தம் அதிகரித்துள்ளது. போதுமான கனரக ஆயுதங்கள் கிடைக்காதது பற்றி உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி கடும் வேதனையை வெளியிட்டிருந்தார். சலஞ்சர்ஸ் 2 டாங்கிகளை உக்ரைனுக்கு வழங்க பிரிட்டன் கடந்த வாரம் அறிவிப்பு வெளியிட்டதை அடுத்து ஜெர்மனி லெபார்ட் 2 டாங்கிகள் அல்லது ஜெர்மனி தயாரிப்பு டாங்கிகளை போலந்து வழங்க அனுமதிப்பதற்கு ஜெர்மனி மீது அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

ரஷ்ய படைகள் மற்றும் நிலங்கள் மீது தாக்குதல் நடத்தும் திறன் கொண்ட கனரக ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்கக் கூடாது என மேற்கத்திய நாடுகளை ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

“இது மிக அபாயகரமானது. இதனால் மோதல் முழுமையாக புதிய கட்டத்திற்கு இட்டுச்செல்லும். நிச்சயமாக, உலகளாவிய மற்றும் ஐரோப்பிய பாதுகாப்புக்கு நல்லதாக அமையாது” என்று ரஷ்ய ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கொவ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ரஷ்யாவையோ அல்லது 2014இல் உக்ரைனில் இருந்து இணைக்கப்பட்ட கிரிமியா தீபகற்பத்தையோ குறிவைத்து மேற்கத்திய நாடுகளின் ஆயுதங்களைப் பயன்படுத்தினால், ரஷ்யா பதிலடி கொடுக்கும் என்று அமெரிக்காவுக்கான ரஷ்ய தூதர் அனடோலி அன்டோனோவ் கூறியுள்ளார்.

மறுபுறம், மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவது அணு ஆயுதப் போருக்கு இட்டுச் செல்லும் என்று ரஷ்ய முன்னாள் ஜனாதிபதி டிமிட்ரி மட்வெடேவ் எச்சரித்துள்ளது.

“அணு சக்தி நாடு ஒன்று சம்பிரதாயப் போர் ஒன்றில் தோற்பது அணு ஆயுதப் போரைத் தூண்டும்” என்று டெலிகிராம் செயலியில் மட்வெடேவ் எச்சரித்துள்ளார்.

மேற்கத்திய போர் டாங்கிகளை வழங்குவதன் காரணமாக உக்ரைனிய போர் விரிவடையும் அச்சுறுத்தலை சமாளிக்க முடியும் என்று நேட்டோவின் ஐரோப்பிய கட்டளை தளபதி குறிப்பிட்டுள்ளார்.

“எம்மால் அச்சுறுத்தலை சமாளிக்க முடியுமா என்றால் நிச்சயமாக முடியும். பொதுவில் எம்மால் அச்சுறுத்தலை சமாளிக்க முடியும் என்று நான் நினைக்கிறேன்” என அமெரிக்க ஜெனரல் கிறிஸ்டோகர் கவோலி பிரசல்ஸில் கடந்த வியாழனன்று (19) செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## மொரேரா உலகின் மிக வயதானவராக வாய்ப்பு



ஸ்பெயினைச் சேர்ந்த மரியா பிரான்யாஸ் மொரேரா உலகில் உயிருடன் இருக்கும் மிக வயதானவர் என்று நம்பப்படுகிறது. அவருக்கு தற்போது 115 வயதாகிறது.

பிரான்ஸைச் சேர்ந்த 118 வயது லுஸில் ராண்டன் கடந்த புதன்கிழமை (17) காலமானார். உலகின் மிக வயதானவர் என்ற கின்னஸ் சாதனையை அவர் வைத்திருந்தார்.

அவரை அடுத்து பிரான்யாஸ் மொரேரா அந்தச் சாதனைக்குச் சொந்தக்காரர் ஆகலாம் என்று கூறப்படுகிறது. கின்னஸ் உலகச் சாதனை அமைப்பு இன்னும் அதிகாரபூர்வ முடிவு ஏதும் எடுக்கவில்லை. ஆவணங்களைச் சரிபார்த்து, நேர்காணல் செய்த பின்னரே அது குறித்து முடிவு எடுக்கப்படும்.

பிரான்யாஸ் மொரேரா 1907ஆம் ஆண்டு மார்ச் 4ஆம் திகதி அமெரிக்காவில் பிறந்தார். முதலாம் உலகப் போரின் போது அவரும் அவரின் குடும்பத்தாரும் தங்கள் சொந்த நாடான ஸ்பெயினுக்குத் திரும்பினர்.

அவருக்கு 3 பிள்ளைகள், 11 பேரப் பிள்ளைகள், 11 கொள்ளுப் பேரப் பிள்ளைகள் உள்ளனர். அவரின் கணவர் 72 வயதில் காலமானார்.

பிரான்யாஸ் மொரேரா உடல் நலத்துடன் இருப்பதாகவும் அவர் மருத்துவமனைக்கே சென்றதில்லை என்றும் அவரின் 78 வயது மகள் கூறினார்.

## தென் கொரிய குடிசை பகுதியில் பயங்கர தீ

### பல நூறு பேர் வெளியேற்றம்



தென் கொரிய தலைநகர் சோலில் குடிசைப் பகுதியில் பாரிய தீ பரவியதை அடுத்து நூற்றுக்கணக்கானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

குலர்யொங் பகுதியில் நேற்று (20) காலை ஏற்பட்ட இந்தத் தீயில் சுமார் அறுபது வீதிகள் கருகியுள்ளன. உயிரிழப்பு மற்றும் காயங்கள் பற்றி உறுதி செய்யப்படவில்லை.

தலைநகரில் இருக்கும் கடைசி சேரிப் பகுதியான இங்கு நெருக்கமாகக் கட்டப்பட்ட தற்காலிக வீடுகள் இருப்பதாக தென் கொரிய ஊடகங்கள் விபரித்துள்ளன. தீயை அணைக்க 900க்கும் அதிகமான தீயணைப்பு வீரர்கள் மற்றும் பல ஹெலிகொப்டர்கள் பல மணி நேரம் போராடினர்.

தீக்கான காரணம் உறுதி செய்யப்படாதபோதும் இங்குள்ள பல வீடுகள் அட்டைப்பெட்டி மற்றும் பலகையால் அமைக்கப்பட்டுள்ளன. 2009 தொடக்கம் இங்கு குறைந்தது 16 தீ சம்பவங்கள் பதிவாகி இருப்பதாக கொரிய டைம்ஸ் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

## ஆப்கான் குளிருக்கு 78 பேர் உயிரிழப்பு



ஆப்கானிஸ்தானில் உறையும் குளிர் கால நிலையால் கடந்த 9 நாட்களில் குறைந்தது 78 பேர் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டின் தலிபான் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உயிரிழப்புகள் தவிர கடந்த சில நாட்களில் 77,000க்கும் அதிமான கால்நடைகள் குளிரில் உறைந்து பலியாகி இருப்பதாக தலிபான்களின் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பேச்சாளர் ஷபியுல்லா ரஹிமி தெரிவித்துள்ளார்.

தலைநகர் காபுல் மற்றும் பல மாகாணங்களில் கடந்த ஜனவரி 10 தொடக்கம் வெப்பநிலை மைனஸ் 33 செல்சியஸ் வரை குறைந்து காணப்படுகிறது. “இந்த குளிர்காலம் அண்மைய ஆண்டுகளை விடவும் குளிரானது” என்று ஆப்கான் வானிநிலை ஆய்வு நிலையத் தலைவர் முஹமது முராதி குறிப்பிட்டுள்ளார்.

கிராமப்புறங்களில் இருக்கும் வீடற்ற குடும்பங்கள் தீமூட்டி குளிர் காய்வதோடு தலைநகரில் வசதி படைத்த குடும்பங்கள் வெப்ப மேற்றும் கருவிகளை பயன்படுத்தி வருகின்றனர். மேலும் ஒரு வாரம் அல்லது அதற்கு மேல் இந்த குளிர் நீடிக்கலாம் என்று எதிர்பார்ப்பதாக முராதி குறிப்பிட்டுள்ளார்.

கடும் பனிப்பொழிவால் பல மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களில் வீதிகள் தடைப்பட்டிருப்பதாக சமூக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 2021 ஓகஸ்டில் தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றியதை அடுத்து ஆப்கானில் பொருளாதாரம் மற்றும் மனிதாபிமான பிரச்சினை மேலும் மோசமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸ் அரசுக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டம்



பிரான்ஸ் அரசு திட்டமிட்டுள்ள ஓய்வூதிய சீர்திருத்தத்திற்கு எதிராக வெடித்த போராட்டத்தால் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியுள்ளது.

பிரான்ஸில் தற்போது அரசு ஊழியர்கள் ஓய்வு பெரும் வயது 62ஆக உள்ளது. இதனை 64ஆக உயர்த்த கடந்த சில ஆண்டுகளாகவே ஜனாதிபதி இமானுவேல் மக்ரான் முயற்சித்து வருகிறார். இந்த மாத ஆரம்பத்தில் பிரதமர் எலிசபெத் போர்ன் பரிந்துரைத்த திட்டங்களின் படி 2027ஆம் ஆண்டு ஒருவர் தனக்குரிய முழுமையான ஓய்வூதியம் பெறுவதற்கு 43 ஆண்டுகள் பணி செய்திருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை கண்டித்து பிரான்ஸ் முழுவதும் நாடு தழுவிய அளவில் வேலை நிறுத்த போராட்டம் நடைபெற்றது.

பாரிஸ் நகரில் திரண்ட லட்சக்கணக்கான மக்கள் வீதிகளில் நடனம் ஆடி தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர். பல இடங்களில் போராட்டகாரர்கள் மீது பொலிசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி விரட்டியடிக்க முயன்றனர்.

அரசுக்கு எதிரான போராட்டத்தில் கல்லூரி மாணவர்கள், அரசு பணியாளர்கள் அதிகளவில் பங்கேற்றனர். நாடு முழுவதும் வெடித்தெழுந்த போராட்டம் காரணமாக ஓய்வூதிய சீர்திருத்த கொள்கையை நிறுத்தி வைக்க ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரான் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## ஜப்பானில் 41 ஆண்டுகளில் இல்லாத அளவு பணவீக்கம்



ஜப்பானில் பணவீக்கம் 41 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது.

முக்கிய நுகர்வுப் பொருட்களின் விலை முந்தைய ஆண்டில் இருந்து கடந்த மாதத்தில் 4 வீதத்தால் அதிகரித்துள்ளது. இது ஜப்பான் மத்திய வங்கி இலக்கு வைத்த அளவை விடவும் இரண்டு மடங்காக உள்ளது.

இது அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை குறைக்கும் வகையில் வட்டி வீதத்தை நிர்ணயிக்க ஜப்பான் மத்திய வங்கிக்கு அழுத்தம் கொடுப்பதாக உள்ளது.

விலை அதிகரிப்பு ஏற்பட்டபோதும் உலகின் மிகக் குறைந்த பணவீக்கம் கொண்ட நாடுகளில் ஒன்றாக ஜப்பான் தொடர்ந்தும் நீடிக்கிறது. உலகின் ஏனைய நாடுகளின் போக்குக்கு அமைவாக உலகின் மூன்றாவது மிகப்பெரிய பொருளாதாரமாக உள்ள ஜப்பான் கடந்த ஆண்டு வட்டி வீதத்தை வேகமாக அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

அண்மைய உத்தியோகபூர்வ தரவுகளின்படி கடந்த டிசம்பரில் அமெரிக்காவில் பணவீக்கம் 6.5 வீதமாக இருந்ததோடு யூரோ வலயத்தில் 9.2 வீதமாகவும் பிரிட்டனில் 10.5 வீதமாகவும் பதிவானது.

## ஆஸியில் இராட்சத தேரை கண்டுபிடிப்பு



வடக்கு அவுஸ்திரேலியாவின் மழைக்காடு ஒன்றில் இருந்து இராட்சத கரும்புத் தேரை ஒன்றை வனவிலங்கு அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

2.7 கிலோகிராம் எடை கொண்ட இந்த இராட்சதத் தேரை சராசரி அளவை விடவும் ஆறு மடங்கு பெரிதாகும். இது உலக சாதனை ஒன்றாக இருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது.

“டோட்சில்லா” என்று பெயரிடப்பட்ட இந்தத் தேரை, விரைவாக கொள்கலன் ஒன்றில் இடப்பட்டு காட்டில் இருந்து வெளியேற்றப்பட்டது.

பூச்சிகளை அழிக்கக் கூடிய தேரைகள் 1935 ஆம் ஆண்டிலேயே அவுஸ்திரேலியாவில் அறிமுகம் செய்யப்பட்டது. தற்போது அங்கு 2 பில்லியனுக்கும் அதிகமான தேரைகள் இருப்பதாக நம்பப்படுகிறது.

வனப் பாதுகாப்பு அதிகாரியான கைலி கிரே குயீன்ஸ்லாந்தில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோதே இந்த இராட்சதத் தேரையை கண்டுள்ளார். “இத்தனை பெரியதொன்றை நான் ஒருபோதும் கண்டதில்லை” என்று அவுஸ்திரேலிய ஒளிபரப்புக் கூட்டுத் தாபனத்திற்கு அவர் குறிப்பிட்டார்.

“கிட்டத்தட்ட கால்பந்துக்கு கால் முளைத்தது போல் உள்ளது. நாம் அதற்கு டொட்சில்லா என்று பெயிரிட்டோம்” என்றும் அவர் கூறினார்.

வனவிலங்கு அதிகாரிகள் பெண் தேரை என நம்பப்படும் அதனை உடனடியாக தமது தளத்திற்கு எடுத்துச் சென்றனர். இந்தத் தேரை உலகில் மிகப் பெரியதாக இருக்கக் கூடும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

சுவீடனில் 1991 ஆம் ஆண்டு பதிவான செல்லப்பிராணியாக வளர்க்கப்பட்ட தேரை ஒன்றே தற்போது கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. அந்தத் தேரை 2.65 கிலோ எடை கொண்டது.

## ஜப்பான்–இந்தியா கூட்டுப் பயிற்சி



ஜப்பான் மற்றும் இந்திய விமானப் படையினர் கூட்டு விமானப் பயிற்சியொன்றை மேற்கொண்டுள்ளனர். இப்பயிற்சி ஜப்பானின் ஹயகுரி விமானப்படைத் தளத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவு ஆரம்பிக்கப்பட்டு 70 வருடங்கள் நிறைவடையும் சூழலில் இரு நாடுகளதும் விமானப்படையினர் இக்கூட்டு பயிற்சியை முன்னெடுத்துள்ளனர்.

இப்பயிற்சியை வரவேற்றுள்ள ஹட்சன் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வாளர் கலாநிதி சட்டொரு நகோ, இக்கூட்டுப்பயிற்சியானது இரு நாடுகளுக்கும் இடையிலான மூலோபாய முக்கியத்துவத்தின் முன்னேற்றம் என்றுள்ளார்.

இரு நாடுகளது விமானப் படைகளும் முன்னெடுத்த இக்கூட்டு விமானப்படை பயிற்சியானது இரு நாடுகளது இராணுவ ஒத்துழைப்பிலும் புதிய அத்தியாயத்தை திறக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஜனவரி 21 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 05.09
லுஹர் - 12.23
அஸர் - 03.45
மஃரிப் - 06.16
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் தை 07
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# எம்மால் இயன்ற வழிகளில் இலங்கைக்கு முழு ஒத்துழைப்புக்களையும் வழங்குவோம்

## பிரதமர் தினேஷிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி



பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை விரைவாக வெளியேறி, தொடர்ந்து முன்னேறுமென நாங்கள் நம்புகிறோம், அதேவேளை, எங்களால் இயன்ற விதத்தில் நாங்கள் உங்களுக்கு ஆதரவளிப்போம்" என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் நேற்று உறுதியளித்தார்.

இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்று (20) அலரிமாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்த போதே இவ்வாறு உறுதியளித்தார்.

இருதரப்பு விவகாரங்கள், கூட்டுத் திட்டங்கள் மற்றும் இலங்கைக்கான இந்தியாவின் உதவிகள் குறித்து பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் ஆகியோருக்கிடையே பயன்மிக்க பேச்சுவார்த்தைகள் இதன்போது நடைபெற்றன.

இலங்கைக்கான உத்தேச IMF உதவிக்கு, இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்குமென, சர்வதேச நாணய நிதியத்திற்கு (IMF) இந்தியா உறுதியளித்ததற்காக பிரதமர் தனது நன்றியைத் தெரிவித்தார். இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் குறுகிய கால கடனை வழங்குவதற்காக, கடனாளிகளிடமிருந்து, அத்தகைய உத்தரவாதத்தை IMF நிறுவனம் விரும்புகிறது.

கடந்த ஆண்டு இலங்கையில் பொருளாதார நெருக்கடி தொடங்கியபோது, மிகவும் நம்பகமான மற்றும் நெருங்கிய நண்பராக வழங்கப்பட்ட 04 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் மறுசீரமைப்பு மற்றும் தொடர்ச்சியான உதவி மற்றும் ஆதரவு ஆகியவற்றிற்கும் பிரதமர் நன்றி தெரிவித்தார்.

"இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை விரைவாக வெளியேறி, தொடர்ந்து முன்னேறும் என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் எங்களால் இயன்ற விதத்தில் நாங்கள் உங்களுக்கு ஆதரவளிப்போம்" என்று அமைச்சர் ஜெய்சங்கர் பிரதமருக்கு உறுதியளித்தார். IMF உடனான தற்போதைய முயற்சிகள், கடன் மறுசீரமைப்பு, கூடுதல் நிதியுதவி மற்றும் இலங்கை இன்னும் நிலையான நிதி நிர்வாகத்தின் பாதையில் செல்வதில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என இந்தியா நம்புவதாக அவர் மேலும் கூறினார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உத்தேச மின் இணைப்பு குறித்து 06



இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது. இருவரும் பரஸ்பர ஆர்வமுள்ள பல்வேறு பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடியதுடன், இலங்கையின் இக்கட்டான காலங்களில் உதவுவதில் உறுதியான அர்ப்பணிப்புடன் இருப்பதற்கும் பகிரப்பட்ட வலுவான உறவுகளுக்கும் இந்திய அரசுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதன்போது நன்றி தெரிவித்தார்.

# அடுத்த மூன்று தினங்களுக்குள் முட்டைக்கான விலை சூத்திரம்

## கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் தெரிவிப்பு



முட்டைக்கான விலை சூத்திரத்தை, எதிர்வரும் 3 தினங்களுக்குள் வழங்குமாறு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான கோப் குழுவின் தலைவர், பேராசிரியர் ரஞ்சித் பண்டார, நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு அறிவுறுத்தினார்.

அந்த அதிகார 06



மறைந்த பிரபல சிங்கள திரைப்பட இயக்குநரும் தயாரிப்பாளருமான கலாநிதி சுமித்ரா பீரிஸின் பூதவுடல், கொழும்பு 05இலுள்ள அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

# ஜெய்சங்கரிடம் பல்வேறு கோரிக்கைகள் முன்வைப்பு

## த.மு.கூ சார்பில் மனோ MP கருத்து



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் நேற்றுமுன்தினம் (19) மாலை தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடியபோது அவரிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்ததாக மனோ கணேசன் எம்.பி தெரிவித்தார்.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்ற இந்த சந்திப்பில் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் மனோ கணேசன், பிரதித்தலைவர்களான பி. திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன். எம்.பிக்களான எம். உதயகுமார், வேலுக்குமார் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது இலங்கையின் 06

மின்சார மோ.சைக்கிள் உற்பத்தி

# ஊக்குவிக்கும் திட்டம் வெரஹரவில் ஆரம்பம்

எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வாக மின்சார மோட்டார் சைக்கிள் உற்பத்தி வேலைத்திட்டத்தை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் நேற்றுமுன்தினம் (19) ஆரம்பித்துள்ளது.

இதன்படி, இலங்கைக்கு இறக்குமதி செய்து மின்சார மோட்டார் சைக்கிள்களாக மாற்றியமைத்து விற்பனை செய்யும் நிறுவனங்களின் பிரதிநிதிகள், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வெரஹர காரியாலயத்துக்கு அழைத்து வரப்பட்டு அந்தந்த மோட்டார் சைக்கிள்களின் தரம் சரிபார்க்கப்பட்டது.

இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டு, அசெம்பிள் செய்து, மாற்றப்படும் அனைத்து மின்சார மோட்டார் சைக்கிள்களுக்கும் குறிப்பிட்ட தரநிலையை அறிமுகப்படுத்த மோட்டார் போக்குவரத்து திணைக்களம் செயற்பட்டு வருகிறது.

# IMFஇன் உதவிகளை பெற அமெரிக்கா ஒத்துழைக்கும்

## டுவிட்டரில் அமெரிக்க தூதுவர் பதிவு



சர்வதேச நாணய நிதியத்தின் உதவிக்காக இலங்கைக்கு ஒத்துழைப்பை வழங்க தயார் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் அவர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டம் குறித்த இந்தியாவின் உறுதிப்பாட்டை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் நெருக்கடிக்கு சமமான நியாயமான தீர்வை வழங்குவதற்கு அனைத்து கடன் வழங்குநர்களும் ஒப்புக்கொள்ளும் போது, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனைப் பெறுவதற்கு அமெரிக்கா உதவ தயாராக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் மேயர் பதவிக்கு போட்டி

# முஜிபுர் ரஹ்மான் MP இராஜினாமா தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொழும்பு மாநகர சபைக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் மேயர் வேட்பாளராக போட்டியிடவுள்ளதால் தாம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட எம்.பி. முஜிபுர் ரஹ்மான் சபையில் அறிவித்தார்.

பாராளுமன்றம் நேற்றுக் காலை கூடிய போது விசேட கூற்றொன்றை முன்வைத்து அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

உள்ளூராட்சி சபை தேர்தலில் கொழும்பு மாநகர சபையின் மேயர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு நான் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு என்னை தெரிவு செய்துள்ளது.

அதன் காரணமாக வெள்ளிக்கிழமை முதல் நான் எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்கின்றேன் என்பதை சபாநாயகருக்கு உத்தியோகபூர்வமாக அறியத்தருகின்றேன் என்றார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் மொஹொமட் முஜிபுர் ரஹ்மான் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யும் கடிதத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயகவிடம் நேற்று கையளித்தார். இது தொடர்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார். 06

துபாயில் கைதான பிரபல கடத்தல்காரரான

# 'ஹரக் கட்டா'வின் மனைவி போதைப்பொருளுடன் கைது

## மஹரகமவில் STF சுற்றிவளைப்பில் சிக்கினார்

துபாயில் கைதான பிரபல போதைப்பொருள் கடத்தல்காரர் 'ஹரக் கட்டா'வின் மனைவியென கூறப்படும் டீனா என்றழைக்கப்படும் திலினி நிஷாதி என்ற பெண் ஹெரோயினுடன் மஹரகமவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் (18) மஹரகம உடஹேன வீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர் 12 கிராம் 800 மில்லிகிராம் ஹெரோயினுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். மஹரகம பிரதேசத்தை சேர்ந்த 31 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவர் ஹரக்கட்டாவின் சட்டபூர்வமற்ற மனைவியென தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பெண்ணின் கணவர், பூலா என்றழைக்கப்படும் தினேஷ் மதுசங்க, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பெண், கொலை செய்யப்பட்ட எம்.டபிள்யூ. மதுர லக்ஷித என்ற 'மிதிகம ஹிச்சி மல்லி' என்பவருடன் தொடர்பை பேணிவந்திருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, தேடப்படும் குற்றவாளியும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரருமான 'ஹரக் கட்டா' என்றழைக்கப்படும் நதுன் சிந்தக டுபாய் பொலிஸாரால் கடந்த வருடம் ஆகஸ்ட் 12 ஆம் திகதி துபாயில் வைத்து கைது செய்யப்பட்டார். அவரை இலங்கைக்கு நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

# இலங்கையிலுள்ள அனைத்து இன மக்களின் நலனுக்காக இந்தியா தொடர்ந்து உதவ வேண்டும்



## எதிர்க்கட்சித் தலைவர், இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவிப்பு

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் நேற்று சந்தித்து பேச்சு நடத்தினார்.

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையின் ஒட்டுமொத்த மக்களின் நலனுக்காக இந்திய அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஆதரவை நல்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக் கொண்டார்.

இரு நாடுகளுக்குமிடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகள் மற்றும் நட்புறவின் பேணலை நினைவு கூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர்,இது நாளுக்கு நாள் வலுப்பெற வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார். 06

ரம்புக்கனை இரட்டைக் கொலை

# பிரதான சந்தேக நபர் உட்பட நால்வர் கைது

ரம்புக்கனை, ஹுரிமலுவ பிரதேசத்தில் இரு இளைஞர்கள் கொன்று புதைக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேகநபர்கள் இருவர் உட்பட மேலும் நால்வர் கேகாலை பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

'ஹுரிமலுவே ஃபர்ஹான்' என்றழைக்கப்படும் மொஹமட் நிசார் மொஹமட் பர்ஹான், அப்துல் லத்தீப் மொஹமட் மற்றும் இக்கொடூரக் கொலைக் குற்றத்துக்கு உதவிய இரு சந்தேக 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 246.96 | 258.26 |
| கனடியன் டொலர் | 266.74 | 278.59 |
| யூரோ | 384.81 | 400.37 |
| ஜப்பான் யென் | 2.7043 | 2.8159 |
| சிங்கப்பூர் டொலர் | 268.94 | 280.31 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 436.25 | 452.93 |
| சுவிஸ் பிராங்க் | 387.32 | 406.01 |
| அமெரிக்க டொலர் | 360.47 | 371.36 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹரின் டினார் | 960.78 | கட்டார் ரியால் | 98.82 |
| குவைத் டினார் | 1,183.98 | சவூதி ரியால் | 96.48 |
| ஓமான் ரியால் | 940.83 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.62 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் தை மாதம் 07ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 27

### குறள் தரும் சிந்தனை



தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு

பிறருக்கு உதவி புரியும் பெருமித உணர்வு, விடாமுயற்சி மேற்கொள்ளக் கூடிய உயர்ந்த இயல்புடையவர்களிடம் நிலை பெற்றிருக்கும்.

# நாட்டின் பொருளாதார நலனுக்கே முக்கியத்துவம் வழங்க வேண்டும்!

நாடெங்கும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான பரபரப்பு உருவாகியுள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமா, இல்லையா என்பது குறித்து இன்னுமே முழுமையாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் உள்ள போதிலும், நாடெங்கும் தேர்தல் களேபரம் குறுகிய காலத்தில் தோன்றியுள்ளது என்பது மட்டும் உண்மை.

அரசியல் கட்சிகள் அனைத்துமே உஷாராகி விட்டன. தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதா அல்லது கூட்டணியாக இணைந்து போட்டியிடுவதா என்பது குறித்து கட்சிகள் கூடிக்கூடி ஆராய்ந்து வருகின்றன. முக்கியமான பல கட்சிகள் தனித்துப் போட்டியிடாமல் மற்றைய சில கட்சிகளுடன் தோழமையாக ஒன்றிணைந்து போட்டியிடுவது பற்றி தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. தனியாகப் போட்டியிட்டால் தோல்வியைத் தழுவி விடுவோமென்ற அச்சமும் இதற்கான காரணம் எனலாம்.

அதேசமயம், சில கட்சிகள் தனியாகப் போட்டியிடுவது குறித்து தீர்மானத்துக்கு வந்துள்ளதாகத் தெரியவருகின்றது. அவை தனித்துவமான கட்சிகளாகும். மற்றைய கட்சிகளுடன் சேர்ந்து முரண்பாடுகளை உருவாக்கிக் கொள்ள அக்கட்சிகள் விரும்புவதாகத் தெரியவில்லை.

தென்னிலங்கை அரசியல் களத்தில் மாத்திரமன்றி வடக்கு, கிழக்கு அரசியல் களத்திலும் பெரும் பரபரப்பு தற்போது நிலவி வருகின்றது. வடக்கு, கிழக்கில் தமிழ் அரசியல் கட்சிகள் இப்போதே தங்களுக்குள் முட்டிமோதத் தொடங்கி விட்டன. ஒரேகுடையின் கீழ் இணைந்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதில் அங்குள்ள கட்சிகள் பலவற்றுக்கு இணக்கம் இல்லையென்றே தெரியவருகின்றது. உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றாமல் விட்டாலும் பரவாயில்லை, ஐக்கியப்பட்டு விடக் கூடாது என்பதிலேயே வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்க் கட்சிகள் கண்ணுங்கருத்துமாக இருப்பதாகத் தெரிகின்றது.

தமிழ் அரசியல் தரப்புகளுக்கிடையில் ஒற்றுமை என்பது எக்காலமும் கிடையாதென்ற கருத்தில் உண்மை இல்லாமலில்லை. தமிழ்க் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை இல்லாததன் காரணமாகவே தமிழ் மக்களின் தலையாய பிரச்சினைகளும் இன்னுமே தீர்க்கப்படாமல் இழுபறி நிலையில் உள்ளன என்பதே உண்மை.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதில் அரசியல் கட்சிகள் இவ்வாறு முட்டிமோதிக் கொண்டிருப்பது ஒருபுறமிருக்கையில், நாட்டின் இன்றைய நிலைமையானது தேர்தலொன்றுக்குப் பொருத்தமானதுதானா என்பதையிட்டு நாட்டுநலனில் அக்கறை கொண்டோர் விமர்சித்து வருகின்றனர். உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதானால் பலநூறு கோடி ரூபா செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருப்பதால், நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி வேளையில் இத்தேர்தல் பொருத்தமற்றதென்று பொருளாதார நிபுணர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அரசாங்கம் கடுமையான பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது. அதேசமயம் இலங்கையின் பொருளாதாரம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருவதாகவும் தகவல்கள் வெளிவருகின்றன. இவ்வாறானதொரு வேளையில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதென்பது பாரதூரமான பின்விளைவுகளையே ஏற்படுத்துமென்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

அவ்வாறு மென்மேலும் பொருளாதார வீழ்ச்சிக்குள் வீழ்வதென்பது எதிர்காலத்தில் மீளமுடியாத நிலைமைக்கு நாட்டை இட்டுச் சென்று விடுமென்பதுதான் பலரதும் கவலையாக இருக்கின்றது. அரசாங்க ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளம் வழங்குவதற்கே அரசாங்கம் நிதிப்பற்றாக்குறையில் திண்டாட வேண்டியுள்ளது. இந்நிலையில் பொதுமக்களுக்கான அத்தியாவசிய சேவைகளையும் அரசாங்கம் தங்குதடையின்றி முன்கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அத்தியாவசிய சேவைகளில் குறைபாடு ஏற்படுமானால் அதனால் பாதிக்கப்படப் போவது அப்பாவிப் பொதுமக்கள் என்பதை மறந்து விடலாகாது.

இவ்வாறான நிலையில் உள்ளூராட்சித் தேர்தலை இவ்வேளையில் நடத்தி, பெருமளவு நிதியை விரயம் செய்து நாட்டை பொருளாதார பாதிப்புக்கு மென்மேலும் இட்டுச் செல்வதென்பது உசிதமானதல்ல என்பதே நாட்டின் நலன் மீது அக்கறை கொண்டோரின் கருத்தாக இருக்கின்றது.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக அரசாங்கம் பலநூற்றுக்கணக்கான கோடி ரூபாவை செலவு செய்வதென்பது ஒருபுறமிருக்க, அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் செலவிடப் போகின்ற செலவுகள் பற்றியும் இங்கு கவனத்தில் கொள்வது அவசியமாகின்றது.

தேர்தல் நெருங்குகின்ற வேளையில் எமது அரசியல்வாதிகளில் பலர் எவ்வாறு பணத்தை வாரியிறைப்பர் என்பது தெரியாத விடயமல்ல. அச்செலவுகள் வீண்விரயமாகும். தேர்தலுக்காக அரசாங்கம் செலவிடுகின்ற பணத்தைப் போலவே அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் செலவிடும் நிலைமை ஏற்படுகின்றது. அது ஆரோக்கியமான நிலைமை அல்ல.

நாட்டின் ஆட்சியதிகாரத்தைத் தீர்மானிக்கப் போகின்ற தேர்தல் அல்ல இது. வெறுமனே உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலே ஆகும். நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்படப் போகின்ற ஆபத்து குறித்தே இவ்வேளையில் அனைவரும் சிந்திப்பது அவசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

# காரைதீவில் பிரமாண்டமாக நடைபெற்ற கல்விச் சாதனையாளர் கௌரவிப்பு விழா



காரைதீவு மண்ணில் இதுவரை இடம்பெற்றிராத வகையில் பிரமாண்டமான முறையில் கல்விச் சாதனையாளர் கௌரவிப்பு விழா சில தினங்களுக்கு முன்னர் இடம் பெற்றது.

Tracks & Asco அமைப்பினர் இணைந்து காரைதீவு மண்ணில் உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று 2023 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 27 மாணவர்களை கௌரவிக்கும் விழா, அமைப்பின் தலைவர் அ.விவேகானந்தராஜா தலைமையில் காரைதீவு விபுலானந்த கலாசார மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

இவ்விழாவில் முதன்மை அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக கல்வித்துறை ஓய்வுநிலை பேராசிரியர் கலாநிதி செ.அருள்மொழி கலந்து சிறப்பித்தார்.

கனடாவில் வாழும் காரைதீவைச் சேர்ந்த வைத்திய கலாநிதி அருளானந்தம் வரதராசா தலைமையிலான TRAKS, ASCO & SEDAK அமைப்பினர் வருடாந்தம் நடாத்திவரும் இந்த ஊக்குவிப்பு செயற்பாட்டை முதன்முறையாக அரங்க விழாவாக ஏற்பாடு செய்திருந்தனர்.

அமைப்பின் செயலாளர் எஸ்.நந்தகுமார் வரவேற்புரை வழங்க, விழா நிகழ்ச்சிகளை உதவிக் கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தி தொகுத்தளித்தார். காரைதீவில் உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் 3A சித்தி பெற்ற மாணவிகளான லோகநாதன் புவித்ரா(மருத்துவம்), சகாதேவராஜா டிவானுஜா(மருத்துவம்) தங்கவடிவேல் டயானு(மருத்துவம்) ரஜிநாதன் துர்க்கா (பொறியியல்) ஆகிய மாணவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டது.

மேலும், ஒவ்வொரு துறையிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 50, 000 ரூபாவும், அத்துடன் அகில இலங்கையில் உயிரியல் பிரிவில் முதலாம் இடம் பெற்ற காரைதீவைச் சேர்ந்த தமிழ்வண்ணன் துவாரகேஷ் அவர்களுக்கு இரண்டேகால் இலட்சம் ரூபா பெறுமதியான தங்கப்பதக்கம் வழங்கி கௌரவப்படுத்தினர். நிதி அனுசரணையை அஸ்கோ அமைப்பும், காரைதீவிலிருந்து புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் பரோபகாரிகளும் வழங்கி இருந்தனர்.

நட்சத்திர அதிதிகளாக கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப துறை பீடாதிபதி கலாநிதி த.மதிவேந்தன், பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி டொக்டர் நடேசன் பகிரதன், பொது சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி டொக்டர் நடேசன் அகிலன், டொக்டர் எஸ்.சாளினி, டொக்டர் எம்.சகானுஜா, எந்திரி இ.துசாந்த் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

வித்திய அதிதியாக உதவி கல்வி பணிப்பாளர் ஆ.பார்த்தீபன், விஞ்சைமிகு அதிதிகளாக ஆசிரியர்களான ரி.தெய்வீகன், எஸ்.தேவகுமார், கே.ருத்திரமூர்த்தி, எஸ்.லிசிகரன், எஸ்.உதயராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அமைப்பின் பொருளாளர் எம்.சுந்தரராஜன், உறுப்பினர் எஸ்.புவனேந்திரராஜா ஆகியோர் அமைப்பின் செயற்பாடுகள் பற்றி கூறினர். சாதனை மாணவர்களின் பெற்றோர், உயர்தர மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# ஐக்கிய அரபு இராச்சியத்தின் மன்னர் தலைமையிலான முதலீட்டாளர் குழு கொழும்பு துறைமுக நகரம் விஜயம்



ஐக்கிய அரபு இராச்சியத்தின் மன்னரான ஷேக் முகமது பின் மக்தூம் பின் ஜுமா அல் மக்தூம் அவர்களின் தலைமையிலான முதலீட்டாளர்கள் குழுவொன்று கடந்த 14 ஆம் திகதியன்று கொழும்பு துறைமுக நகரத்திற்கு விஜயம் செய்தது. இந்த திட்டத்திற்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில், பிரதிநிதிகள் குழு உறுப்பினர்கள், கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு மற்றும் கொழும்பு துறைமுக நகர பிரதிநிதிகளுக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது.

கொழும்பு துறைமுக நகரத்தின் அபிவிருத்தி மற்றும் எதிர்காலத்திற்கான திட்டங்கள் பற்றிய விரிவான கண்ணோட்டம் தூதுக்குழுவினருக்கு வழங்கப்பட்ட சமயத்தில் அவர்கள் இதனைப் பாராட்டியதுடன், அதைத் தொடர்ந்து கொழும்பு துறைமுக நகர கடற்கரை நடைபாதை சுற்றுப்பயணத்தை மேற்கொண்டனர்.

கொழும்பு துறைமுக நகரம் நாட்டில் ஒரு புதிய பொருளாதார மையமாக செயல்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், இது பலதரப்பட்ட வணிக மற்றும் குடியிருப்பு வாய்ப்புகளை வழங்குகிறது. வேலைவாய்ப்பு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பது உட்பட இலங்கைக்கு கணிசமான பொருளாதார நன்மைகளை இந்த திட்டம் கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

CHEC Port City Colombo (Private) Limited இன் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளரான துல்சி அலுவிஹார, இவ்விஜயம் மற்றும் கலந்துரையாடல்களின் முன்னேற்றம் குறித்து தனது கருத்துக்களை வெளிப்படுத்துகையில், "மன்னர் தலைமையிலான இந்த தூதுக்குழுவை வரவேற்று, கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தின் வளர்ச்சி வாய்ப்புக்களை காண்பிப்பதற்கான வாய்ப்பு கிடைத்ததில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எதிர்காலத்தில் அதிக அளவிலான முதலீட்டாளர்கள் மற்றும் கூட்டாளர்களை வரவேற்க நாங்கள் ஆவலாக உள்ளோம். அத்துடன், 2023 ஏப்ரல் அளவில் கொழும்பு துறைமுக நகரத்தின் தீர்வையின்றிய அங்காடி வளாகத்தை திட்டமிட்டவாறு திறக்கப்படவுள்ளதையும் நாம் எதிர்பார்த்துள்ளோம்" என்று குறிப்பிட்டார்.

ஐக்கிய அரபு இராச்சிய தூதுக்குழுவில் லூக் செல்வுட் மன்னர் ஷேக் முகமது பின் மக்தூம் பின் ஜுமா அல் மக்தூமின் ஆலோசகர், இவான் ஷ்கர்பா efiscal பங்காளர் மற்றும் முதலீட்டாளர் ஆகியோரும் அடங்கியிருந்தனர். இவான் அவர்கள் ஏனைய வணிக வாய்ப்புகளிலும் மேதகு மன்னருடன் இணைந்து முதலீடு செய்து வருகிறார்.

அத்துடன், ஜெகடெரினா கமிலோவ் இவான் ஷ்கர்பாவின் தனிப்பட்ட உதவியாளர், டாமிர் மக்முடோவ் efiscal இன் சர்வதேச விரிவாக்கத்தின் துணைத் தலைவர், ரஹ்மி மோர்கோஸ் Ska Group இன் பணிப்பாளர், முஸ்தபா உஸ்மான் அரிபந்த்ரா மன்னரின் வணிக மேம்பாட்டு முகாமையாளர், கலாநிதி சித்தீக் அகமது தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர், Eram Group ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சவுதி அரேபியா ஆகியோரும் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

ஆணைக்குழுவின் சார்பாக, நிதிச் சேவைகள் மற்றும் இணக்கப்பாடுகளுக்கான பணிப்பாளரான ரேவன் விக்கிரமசூரிய, சட்ட மற்றும் நிறுவன விவகாரங்களுக்கான பணிப்பாளரான விந்தியா வீரசேகர, வர்த்தக மற்றும் செயற்பாடுகளுக்கான பணிப்பாளரான திமாந்த கினிகம மற்றும் வர்த்தகநாம ஊக்குவிப்பு மற்றும் தொடர்பாடல்களுக்கான தலைவரான தன்யா குணவர்தன ஆகியோரும், CHEC Port City Colombo (Private) Limited சார்பாக, துணை முகாமைத்துவப் பணிப்பாளரான துல்சி அலுவிஹார, எரிக் ஓ உதவி முகாமைத்துவப் பணிப்பாளர், கலாநிதி ஜோ லெக்ப்லிபோல் முதலீட்டு ஊக்குவிப்பு பிராந்திய தலைவர் (இந்தோசீனா தீபகற்பம்), ராதிகா ஒபேசேகர முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் பணிப்பாளர், ஷாலக விஜேயரத்ன, MCIM (UK), MABE (UK) நிர்வாகப் பணிப்பாளர் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல், நிசல் கருணபால முகாமையாளர் மூலோபாயம் மற்றும் பரிவர்த்தனை சேவைகள் மற்றும் ஷேன் அமடோரு பிராந்திய முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் (மத்திய கிழக்கு) ஆகியோர் ஐக்கிய அரபு இராச்சியத்தின் பிரதிநிதிகளை வரவேற்றனர்.





இலங்கையின் இறையாண்மை பிரதேசத்தில் 2.69 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை சேர்த்துள்ள கொழும்பு துறைமுக நகரம், இலங்கையின் மிகப்பெரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு நிதியுடனான அபிவிருத்தித் திட்டமாகும். 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் உள்கட்டமைப்பு மேம்பாடு முடிவடையவுள்ள நிலையில், திட்ட நிறுவனம் வழங்கிய 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் தொகையில், 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் தொகையானது கொழும்பு துறைமுக நகரத்தில் ஏற்கனவே முதலீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கட்டடங்களில் நிர்மாணப் பணிகளின் கட்டத்தில் மேலும் 1.5 பில்லியன் டொலர் தொகை முதலீடு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் இப்பணிகள் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 7 மில்லியன் அமெரிக்க டொலர் தொகை மதிப்பிலான தீர்வையற்ற அங்காடி வளாகமானது தெற்காசியாவிலேயே இந்த வகையில் முதன்முறையானதாக அமைந்துள்ளதுடன், கொள்வனவு மற்றும் சுற்றுலாவுக்கான ஈர்ப்பாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 2023 ஏப்ரலில் கொழும்பு துறைமுக நகரத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

# சீனாவுக்கு சவாலாக அருணாச்சலத்தில் புதிய அணையை அமைக்கிறது இந்தியா!

சீனாவைக் கடந்து இந்திய எல்லைக்குள் நுழையும் பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே சீனா பிரமாண்ட அணையை கட்ட தொடங்கியுள்ள நிலையில், இந்தியாவும் அருணாச்சலப் பிரதேசத்தில் புதிய அணையை வேகமாக கட்டத் தொடங்கியுள்ளது.

இந்தியாவின் அருணாச்சாலப் பிரதேசத்தின் சில பகுதிகளை சீனா தற்போது வரை தங்களுடையதாக கூறி சொந்தம் கொண்டாடி வருகிறது. ஆனால் இந்தியா இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. இந்நிலையில் இந்த சர்ச்சைக்குரிய பகுதிகளில் சீனா தனது கட்டுமானங்களை விரிவுபடுத்தி வருகிறது. சமீபத்தில் அருணாச்சலப் பிரதேச எல்லையையொட்டியுள்ள பகுதியில் சுமார் 67 கி.மீ தொலைவுக்கு சீனா வீதியை அமைத்தது.



ஏறத்தாழ ரூ.25 ஆயிரம் கோடி ஒதுக்கி 2014ம் ஆண்டு தொடங்கி 7 ஆண்டுகளில் இந்த பிரமாண்டமான வீதியை சீனா கட்டி முடித்திருக்கிறது. 67.22 கி.மீ தொலைவு கொண்ட இந்த நெடுஞ்சாலையானது சீனாவின் நைஞ்சியில் உள்ள பேட் டவுன்ஷிப்பை, மெடோக் கவுண்டியில் உள்ள பைபங் டவுன்ஷிப்புடன் இணைக்கிறது.

இந்த கட்டுமான பணிகளை இந்தியா கடுமையாக எதிர்த்து வந்த போதிலும் சீனா விடாபிடியாக வீதியை அமைத்து முடித்துவிட்டது. இதனையடுத்து தற்போது அடுத்த நகர்வுக்கு சீனா சென்றிருக்கிறது. அதாவது, பிரம்மபுத்திரா நதி உருவாகும் சீன எல்லையில் அமைந்துள்ள திபெத் பகுதியில் சுமார் 60,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட மிகப்பெரிய அணையை கட்ட சீனா திட்டமிட்டுள்ளது. சீன அரசின் 'பவர் கன்ஸ்ட்ரக்ஷன் கோர்ப்பரேஷன்' இந்த கட்டுமாணப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. இது 2025ம் ஆண்டுக்குள் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது போல பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே அணை கட்டுவது முதல்முறையல்ல. இதற்கு முன்னரே சுமார் ரூ.1.22 இலட்சம் கோடி மதிப்பில் திபெத்தின் 'ஜாம்' நீர்மின் நிலையத்தை சீனா கடந்த 2015ம் ஆண்டு கட்டி முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வந்தது.

இந்நிலையில் தற்போது இரண்டாவது அணை கட்டும் முயற்சியில் இறங்கியுள்ளது. இந்த அணை கட்டப்பட்டால் பிரம்மபுத்திரா நதியை நம்பியுள்ள மாநிலங்கள் பாதிக்கப்படும். கோடைக்காலங்களில் நீருக்கு பஞ்சமும் மழைக்காலங்களில் அதீத வெள்ளமும் ஏற்படும். எனவே இதனை இந்தியா எதிர்க்கிறது. இந்தியாவுக்கு பிரம்மபுத்திரா நதியிலிருந்து சுமார் 30% குடிநீரும், 40% மின்சாரமும் கிடைக்கிறது. ஆனால் இந்த நதியின் 50% பரப்பு சீனாவில்தான் இருக்கிறது. எனவே சீனா தன்னுடைய இஷ்டத்திற்கு முடிவுகளை எடுத்திருக்கிறது. சீனாவின் இந்த முடிவால் இந்தியா மட்டுமல்லாது வங்கதேசமும் பாதிப்பை சந்திக்கும்

எனவே இதனை தடுக்க இந்தியா 'லோயர் சுபன்சிரி திட்டத்தை' கொண்டு வந்தது. இந்த திட்டத்தின்படி அருணாச்சல பிரதேசத்தில் உள்ள அப்பர் சுபன்சிரியில் 11,000 மெகாவாட் (மெகாவாட்) மின்சாரம் தயாரிக்கும் விதமாக அணை கட்ட திட்டமிடப்பட்டது. தற்போது இதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இந்த அணை கட்டப்பட்டால் சீனா திறந்துவிடும் நீரால் ஏற்படும் வெள்ளத்தை இந்தியாவினால் கட்டுப்படுத்த முடியும். அதுமட்டுமல்லாது வடகிழக்கு மாநிலங்களில் உள்ள இளைஞர்களுக்கு குறிப்பிட்ட அளவில் வேலைவாய்ப்பையும் ஏற்படுத்தி கொடுக்க முடியும்.

இந்த அணை அசாம் மாநிலத்தின் தண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் என்றும் சொல்லப்படுகிறது. தற்போது இந்த கட்டுமான பணிகளை விரைவாக முடிக்க மத்திய அரசு முனைப்பு காட்டி வருகிறது.

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பன்னாட்டு தமிழ்ப் பெண்களுக்கு சாதனைப் பெண்கள் விருது

உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பினால் தமிழ்ப் பெண்களை ஊக்குவிக்கும் விதமாகவும், உத்வேகம் கொடுக்கும் வகையிலும் 'சாதனை பெண்கள் விருது' (FABULOUS FEMININE AWARDS) ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்துத் துறைகளிலும் பெண்கள் சாதிக்க வேண்டும், அனைத்துத் துறைகளிலும் துறைசார்ந்த வல்லுனர்களாக பெண்கள் உயர வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் இரண்டாவது வருடமாக 'சாதனைப் பெண்கள் விருது' மார்ச் மாதம் முதல் வாரத்தில் சென்னையிலுள்ள நட்சத்திர விடுதியில் நடைபெற உள்ளது.

அந்நிகழ்வில் மருத்துவம், பொறியியல், விண்வெளி, அரசியல், IAS, IPS, IFS, IRS, தொழில்முனைவோர் மற்றும் பல்வேறு துறை சார்ந்த பெண் வல்லுநர்களுக்கு 'சாதனைப் பெண்கள் விருது' வழங்கப்பட உள்ளது. அந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக திரையுலக பிரபலங்கள், சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் பெண் ஆளுமைகள் போன்றோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் இந்தியா மட்டுமல்லாமல் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழ்ப் பெண்களை அழைத்து சாதனைப் பெண்கள் விருது வழங்கப்பட உள்ளது. இந்நிகழ்வினைப்பற்றி மேலும் விபரம் அறிவதற்கு gotoorganisation@gmail.com மற்றும் whatsapp +60166167708 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம் என உலகத்தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவரும், நிகழ்ச்சி ஏற்பாட்டாளருமான செல்வகுமார் இணையதளம் மூலம் பன்னாட்டு ஊடகங்களுடனான நேர்காணலின் போது தெரிவித்தார்.



## உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பினால் ஏற்பாடு

# வாக்கு வங்கி அரசியலை பா.ஜ.க அரசு நடத்தவில்லை

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் எதிர்வரும் மே மாதத்துக்குள் தேர்தல் நடைபெறவிருப்பதால், பாரதிய ஜனதா கட்சி, காங்கிரஸ், மதச் சார்பற்ற ஜனதா தளம் என அனைத்துக் கட்சியினரும் தீவிர பிரசாரத்தில் தற்போது களமிறங்கியிருக்கின்றனர்.

அரசியல் கட்சிகளின் தேசியத் தலைவர்கள் நிகழ்ச்சிநிரல் அமைத்து கர்நாடக மாநிலத்தில் சுற்றுப்பயணம் செய்து, வாக்குகள் சேகரித்து வருகின்றனர்.

இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பா.ஜ.க தேசியத் தலைவர் ஜே.பி.நட்டா ஆகியோர் கர்நாடக மாநிலத்துக்கு வந்து சென்ற நிலையில், கடந்த வாரம் ஹுப்ளி என்ற பகுதியில் நடைபெற்ற 26 ஆவது தேசிய இளைஞர் தின விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றிருந்தார்.

இந்த நிலையில், இரு தினங்களுக்கு முன்னர் யாத்கிர், காலபுராகி மாவட்டங்களில் இரண்டாவது முறையாக சுற்றுப்பயணம் வந்திருந்த பிரதமர் நரேந்திர மோடி, வீதிகள், அடிப்படைக் கட்டமைப்புகளுக்காக 10,800 கோடி ரூபாவுக்கான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.



'கல்யாண கர்நாடக' என அழைக்கப்படும் பிதார், யாத்கிர், ராய்ச்சூர், கொப்பல், காலபுராகி, பல்லாரி, விஜயநகரம் ஆகிய ஏழு மாவட்டங்களைச் சேர்ந்த, 51,000 பழங்குடியின மற்றும் பட்டியலின மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா மற்றும் நலத்திட்டங்கள் வழங்கி, பழங்குடியின பெண்களிடம் பிரதமர் நரேந்திர மோடி ஆசிர்வாதம் பெற்றார்.

அதைத் தொடர்ந்து, பழங்குடியின மக்களின் பாரம்பரிய இசைக் கருவியை இசைத்து, அவர்களிடம் பிரதமர் உரையாற்றினார். இதில், முதல்வர் பசவராஜ் பொம்மை மற்றும் கட்சியின் மாநில நிர்வாகிகள் பங்கேற்றனர்.

அந்நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, "பா.ஜ.க அரசாங்கத்தின் நோக்கம் வாக்கு வங்கி அரசியல் அல்ல; வளர்ச்சிதான் எமது நோக்கம். இதை, நீங்கள் கர்நாடக மாநிலத்தில் காணமுடியும்.

கர்நாடகத்தை ஆட்சி செய்த மற்றைய கட்சியினர், யாத்கிர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களை பின்தங்கிய மாவட்டங்களாக அறிவித்து, வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளாமல் கைகழுவி விட்டனர். வளர்ச்சிக்கான பணிகளை மேற்கொள்ள வேண்டிய நேரத்தில் வாக்கு வங்கி அரசியலுக்கான பணியை மேற்கொண்டு வந்தனர்.

## இந்தியாவின் வளர்ச்சியே எமது இலட்சியம்

இன்று கர்நாடகத்திலுள்ள, பஞ்ஜரா (பழங்குடியினர்) சமூக மக்களுக்கு முக்கியமான நாள். 50,000 பஞ்ஜரா மக்கள் விரைவில், தங்கள் சொந்த வீட்டில் வசிக்கப் போகிறார்கள். கர்நாடகத்தில் வளர்ச்சி மற்றும் உட்கட்டமைப்பில் கவனம் செலுத்தும் அரசாங்கத்தால், இந்த மாநிலம் முதலீட்டாளர்களின் விருப்பமான இடமாக மாறியிருக்கிறது.

அடுத்த, 25 ஆண்டு காலம் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும், ஒவ்வொரு மாநிலத்துக்கும் அமிர்த காலமாக இருக்கப் போகிறது. இதற்காக, நாம் இந்தியாவை வளர்ந்த நாடாக கட்டமைக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.




## கர்நாடகாவில் மே மாதம் தேர்தல்

# வலிமையான, இரக்கமுள்ள பெண் ஜெசிந்தா ஆர்டெர்ன்!

குழந்தை பெற்றெடுத்த ஆறு வாரங்களில் 2018 இல் பிரதமராக பணிக்குத் திரும்பி, உலகின் கவனத்தை ஈர்த்த நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் (Jacinda Ardern) தற்போது அப்பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

"நான் ஒன்றும் 'சுப்பர் வுமன்' அல்ல, என் கணவர் வீட்டில் இருந்து குழந்தையை பார்த்துக் கொள்வதால் மட்டுமே என்னால் பணியைப் பார்க்க முடிகிறது. நானும் சாதாரண பெண்தான். எனக்கு 'சுப்பர் வுமன்' போன்ற தோற்றம் தேவையில்லை. பெண்கள் எல்லாம் அப்படி இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கக் கூடாது" என்று 2018ஆம் ஆண்டு த ஃபினான்சியல் டைம்ஸ் பத்திரிகைக்கு பேட்டியளித்த ஜெசிந்தா தெரிவித்திருந்தார்.

ஜெசிந்தா ஆர்டெர்ன் பிரதமராக இருக்கும் போது குழந்தை பெற்றுக் கொண்டதும், உடனடியாக பணிக்கு வந்ததும் உலகத்தை அவர் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது.

அது மாத்திரமன்றி 2019ஆம் ஆண்டு கிரைஸ்ட் சர்ச் தீவிரவாத தாக்குதல் சம்பவத்தை அவர் அணுகிய விதம், ஜெசிந்தாவை வலிமையான, அதேநேரத்தில் இரக்கமுள்ள தலைவராக உலக அரங்கில் பதிவு செய்தது.

1980ஆம் ஆண்டு ஹேமில்டனில் பிறந்த ஜெசிந்தா, தன்னுடைய குழந்தைப் பருவத்தை சிறு கிராமப்புறப் பகுதிகளில் கழித்தார். அவருடைய தந்தை காவல்துறை அதிகாரியாக இருந்தார். அவரது தாய் பாடசாலைகளில் சமையலர் பணி செய்து வந்தார்.

சிறு கிராமங்களில் அவர் பார்த்து வளர்ந்த வறுமை, அவரது அரசியல் சிந்தாந்தத்தை வடிவமைத்தது. தனது 17 வயதில் தொழிலாளர் கட்சியின் ஆதரவாளரானார் ஜெசிந்தா.

நியூசிலாந்தின் மூன்றாவது பெண் பிரதமரான ஜெசிந்தா ஆர்டெர்ன், அரசியல் மற்றும் பொது தொடர்புத் துறையில் பட்டம் பெற்றவர். முன்னாள் நியூசிலாந்து பிரதமர் ஹெலன் கிளர்க்கிடம் பணிபுரியத் தொடங்கினார்.

பின்னர்2008ஆம் ஆண்டு நியூசிலாந்து திரும்பிய அவர், நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது குழந்தை வறுமை ஒழிப்பு, ஒருபாலினத்தவர்களின் உரிமைகள் தொடர்பான சட்ட மசோதாக்களை ஆதரித்தார்.

2017ஆம் ஆண்டு நியூசிலாந்து தேர்தல் நடக்கவிருந்த ஏழு வாரங்களுக்கு முன்புதான் ஜெசிந்தா தொழிலாளர் கட்சியின் தலைவரானார். அப்போது அவர் வெற்றிபெற வாய்ப்பு குறைவு என்றே கூறப்பட்டது.

அவருக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை என்றாலும், அந்நாட்டின் தேசியவாத கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைத்து சாதனை படைத்தார் ஜெசிந்தா.

அதன்பின் 2020 இல் மீண்டும் ஜெசிந்தா ஆர்டெர்ன் தலைமையிலான தொழிலாளர் கட்சி அந்த நாட்டில் நடந்த பொதுத் தேர்தலில் 120 இடங்களில் 60 இற்கும் மேலான இடங்களைப் பெற்று பெரும்பான்மை வெற்றியைப் பெற்றது.

நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் ஜெசிந்தாவின் தொழிலாளர் கட்சி 49 சதவீத வாக்குகளைப் பெற்றதன் மூலம், நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையுடன் இவர் மீண்டும் ஆட்சியமைத்தார்.

தேர்தலில் அமோக வெற்றி பெற்று மீண்டும் நியூசிலாந்து பிரதமராகிய ஜெசிந்தாவை நோக்கி, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தனது முதல் குழந்தையைப் பெற்றெடுத்த உங்களால் தாயாக இருந்துகொண்டு, பொதுவாழ்விலும் வென்று காட்ட முடியுமா என்று 2020இல் கேட்கப்பட்டது.

ஆயினும் இளம்தாயாக, நாட்டின் இளம்தலைவராக விளங்கி, கிரைஸ்ட் சர்ச் தீவிரவாத தாக்குதல், எரிமலைச் சீற்றம், கொரோனா தொற்று என அனைத்திலும் நியூசிலாந்து நாட்டை வழிநடத்தி சென்ற ஜெசிந்தா ஆர்டெர்ன், அந்நாட்டின் பிரதமராக கடந்த ஆறு ஆண்டுகளாக பணியாற்றினார்.

உலகக் உலுக்கிய கிரைஸ்ட் சர்ச் தீவிரவாத தாக்குதல் கொலையாளியின் பெயரைக்கூட வெளிப்படையாகக் கூற மறுத்த ஜெசிந்தா, அவர் நியூசிலாந்து மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்றும், அவரை அந்நாடு ஏற்காது என்றும் தெரிவித்தார். அடுத்த ஒரு சில நாட்களில் அந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவரது உறவினர்களுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார். அதோடு, அந்நாட்டின் துப்பாக்கி வைத்திருத்தல் தொடர்பான சட்டங்களை மாற்றி அமைத்தார். இதனால், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் துப்பாக்கிச் சட்டங்களை மாற்ற வேண்டும் என்ற குரல் எழுந்தது.

பின்னர் 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், அந்நாட்டில் எரிமலைச் சீற்றம் சம்பவம் நிகழ, அதில் அவுஸ்திரேலியா, அமெரிக்க நாட்டினர் உள்பட 17 பேர் உயிரிழந்தனர். அப்போதும் ஜெசிந்தா தனது பொறுப்பை சரியாக செய்தார் என்று சர்வதேச ரீதியில் பாரட்டப்பட்டார்.

அதற்கு அடுத்து வந்த கொரோனா பெருந்தொற்றை நியூசிலாந்து கையாண்ட விதத்திற்கு உலகளவில் ஜெசிந்தாவுக்கு பாராட்டுகள் குவிந்தன. சர்வதேச பெண் அரசியல் தலைவர்களுள் தனக்கென தனிஇடத்தை பெற்றுக்கொண்ட ஜெசிந்தா ஆர்டெர்ன், 'மீண்டும் தேர்தலில் போட்டியிட மாட்டேன்' என அறிவித்து தன் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

பதவி விலகல் குறித்து அவர் கூறுகையில், "இந்த பதவி குறித்து நன்கு அறிவேன், இனி இதைத் தொடர என்னிடம் போதுமான ஆற்றல் இல்லை என்பதை உணர்கிறேன்"எனத் தெரிவித்துள்ளார்.

2017 இல் முதன் முறையாக தனது 37 ஆவது வயதில் ஜெசிந்தா ஆர்டெர்ன் நியூசிலாந்தின் பிரதமரானார். அதன்பிறகு 3 ஆண்டுகளுக்கு பிறகு நடந்த தேர்தலில் அவரது தலைமையிலான கூட்டணி மீண்டும் வெற்றி பெற்றது. இரண்டாம் முறையாக ஜெசிந்தா ஆர்டெர்ன் தொடர்ந்து பிரதமராக செயல்பட்டு வந்தார்.

கொரோனா பரவல், பொருளாதார இழப்பு உள்ளிட்ட பிரச்சினைகளை இவர் தலைமையிலான அரசு சமாளித்து வந்தது. மேலும் வெளிநாடுகளுடன் நல்ல உறவை பேணிக்காத்து வந்தார். இந்த ஆண்டு நியூசிலாந்தில் பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கு அனைத்து கட்சிகளும் தயாராகி வரும் நிலையில்தான் விரைவில் ஜெசிந்தா ஆர்டெர்ன் தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்யலாம் என்ற தகவல்கள் வெளியாகி வந்தன.

இந்நிலையில்தான் பிரமதர் பதவியை ராஜினாமா செய்வதாக ஜெசிந்தா ஆர்டெர்ன் திடீரென அறிவித்துள்ளார். கடந்த ஐந்தரை ஆண்டுகளாக பிரதமர் பதவி வகித்து வந்த இவர் இந்த அறிவிப்பை வெளியிட்டது கட்சியினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

"பதவி விலகலுக்கான நல்ல நேரம் இதுவென நினைக்கிறேன். நான் பதவியில் இருந்து வெளியேறாவிட்டால் அடுத்த தேர்தலில் நம்மால் வெற்றி பெற முடியாது என நம்புகிறேன். இனி வரும் தேர்தலில் நான் போட்டியிடப் போவது இல்லை'' என்றார்.

ஜனவரி 22 இல் லேபர் கட்சியின் புதிய தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளது. இதையடுத்து இடைக்கால பிரதமர் தேர்வு செய்யப்பட உள்ளார். இதற்கிடையே தான் ஜெசிந்தா ஆர்டெர்ன் தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்ததன் பின்னணியில் முக்கிய காரணம் ஒன்று உள்ளது.

நியூசிலாந்தில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை பொதுத்தேர்தல் நடைபெறும். கடந்த 2017 ஆம் ஆண்டுக்கு பிறகு 2020 இல் தேர்தல் நடந்தது. மீண்டும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் தேர்தல் நடைபெற உள்ளது. இதுதொடர்பாக சமீபத்தில் கருத்துக் கணிப்புகள் எடுக்கப்பட்டன. அப்போது கட்சியின் புகழ் என்பது மக்கள் மத்தியில் குறைந்து வருவதாக கருத்துக் கணிப்புகள் தெரிவித்துள்ளன. மேலும் இது கட்சிக்கு வரும் தேர்தலில் பாதகத்தை ஏற்படுத்தலாம் என கூறப்பட்டது. இந்நிலையில்தான் ஜெசிந்தா ஆர்டெர்ன் பிரதமர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆயினும் கொரோனா பரவல் காலத்திலும், பொருளாதார இழப்பு உள்ளிட்ட 1 இவர் தலைமையிலான அரசு சமாளித்து வந்த விதமும், மேலும் வெளிநாடுகளுடன் நல்ல உறவை பேணிக்காத்து வந்த ஜெசிந்தா ஆர்டெர்ன் ஆளுமை மிகுந்த பெண் பிரதமராக கணிப்பிடப்படுகிறார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா...



## உலகினால் பாராட்டப்பட்ட நியூசிலாந்து பிரதமர் பதவி துறக்கிறார்!



# டொலொஸ்பாகே தோட்டப் பாடசாலைக்கு குடிநீர் வசதியை வழங்கிய Allianz Lanka நிறுவனம்

இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான Allianz Lanka நிறுவனம், அதன் நிலைத்தன்மை திட்டத்திற்கு ஏற்ப, டொலொஸ்பாகேயின் Kelly Group Estate இல் அமைந்துள்ள CP/GMP/Kelly Group ஆரம்பப் பாடசாலைக்கு சுத்தமான குடிநீர் அமைப்பை நன்கொடையாக அளித்து உதவியுள்ளது.

அப்பிரதேசத்திலுள்ள தேயிலைத் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் குழந்தைகளான இப்பாடசாலை மாணவர்கள் குறைந்தபட்ச வசதிகளுடன் தமது கல்வி நடவடிக்கைளில் ஈடுபட்டு வருகின்றனர். பெரும்பாலான மாணவர்கள் தினமும் சுமார் 5 கி.மீ தூரம் நடந்து பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளதுடன், அவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில் சுத்தமான குடிநீர் இல்லாததால் மேலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அதேவேளை இவர்களது பெற்றோர் தாம் எதிர்நோக்கும் தமது சொந்த நிதிச்சிக்கல்கள் காரணமாக இது தொடர்பாக எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். மத்திய மாகாணத்தின் கண்டி கல்வி வலயத்திலிருந்து 46 கிலோமீற்றர் தொலைவில் உள்ள Kelly Group ஆரம்பப் பாடசாலை, கண்டி மாவட்டத்தினதும் சபாரகமுவ மாகாணத்தினதும் எல்லையில் அமைந்துள்ளது. இப்பாடசாலையில் 55 மாணவர்கள் மிகவும் சிரமங்களின் மத்தியில் கல்வி கற்று வருகின்றனர். இப்பாடசாலையில் 15 அடி ஆழமான கிணறு, தண்ணீர்த் தொட்டியை நிலையாக தாங்கி வைத்திருக்க நிலையான கோபுரம், தண்ணீர் பம்ப் மற்றும் முழுமையான குழாய் அமைப்பு உள்ளிட்ட சுத்தமான குடிநீர் வழங்குவதற்கான முழுமையான அமைப்பை Allianz Lanka இப்பாடசாலையில் நிறுவியுள்ளது.

இச்செயற்திட்டத்தின் கையளித்தல் நிகழ்வின் போது, Allianz Lanka இன் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மங்கள பண்டார கருத்துத் தெரிவிக்கையில், "'அனைவருக்கும் சுத்தமான தண்ணீர் மற்றும் சுகாதாரம்', என்ற கருப்பொருளுக்கு ஏற்ப எமது பிள்ளைகளுக்கு பாதுகாப்பான மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்குவது எங்களுக்கு முக்கியமான ஒன்றாக அமைகின்றது. இப்பாடசாலையில் வயரிங் அமைப்பை சரிசெய்து, சுவர்களுக்கு மீண்டும் பூச்சுகளை பூச நடவடிக்கை எடுத்துள்ளோம்" என்றார்.

Allianz Lanka வின் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி அமங்கள பண்டார மற்றும் பிராந்திய விற்பனை மற்றும் முகாமைத்துவ குழுக்களின் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



## இலங்கையிலுள்ள அனைத்து... 03ஆம் பக்கத் தொடர்

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெயசங்கருடன் அவரது தூதுக் குழுவினரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## எம்மால் இயன்ற வழிகளில்... 03ஆம் பக்கத் தொடர்

கருத்து தெரிவித்த பிரதமர் குணவர்தன, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இந்திய முதலீடுகளை வலியுறுத்தினார். "இலங்கையில் காற்று மற்றும் சூரிய ஒளி ஏராளமாக உள்ளது, மேலும் இது போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு மிகப்பெரிய சாத்தியம் உள்ளது" என்றும் அமைச்சர் ஜெய்சங்கர் கூறினார்.

இலங்கையில் 4.2 மில்லியன் பாடசாலை மாணவர்களுக்கு 19 மில்லியன் பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிட உதவியமைக்காக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்தியாவுக்கு நன்றி தெரிவித்தார். இலங்கையிலுள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த, கல்வித்துறையில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துமாறு அமைச்சர் ஜெய்சங்கரை அவர் மேலும் வலியுறுத்தினார்.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன, பொதுப் போக்குவரத்தை மேம்படுத்த கடன் வரியின் கீழ் இந்தியாவின் உதவியை கோரினார். கொழும்பிலிருந்து அவிசாவளை வரை மற்றும் களனிவெளி புகையிர பாதையை மேம்படுத்துவதற்கும், கூட்டு முயற்சியின் கீழ் இலங்கையில் மின்சார பஸ்களை நிர்மாணிப்பதற்கும், பொது, தனியார் பங்காளித்துவத்தின் கீழ் முன்மொழியப்பட்ட கூட்டு முயற்சியை இந்தியா சாதகமாக பரிசீலிக்கும் என்று இந்திய அமைச்சர் கூறினார்.

அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, பாராளுமன்ற உறுப்பினர் யாதாமினி குணவர்தன, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, மேலதிக செயலாளர் மஹிந்த குணரத்ன ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்திய தூதுக்குழுவில் உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, இணை செயலாளர் புனித் அகர்வால், இயக்குனர் சந்தீப் குமார் பையாப்பு, துணை செயலாளர் நிதி சவுத்ரி, துணை செயலாளர் ரகு பூரி மற்றும் பிரதி உயர் ஸ்தானிகர் வினோத் ஜேக்கப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பிரதான சந்தேக நபர்... 03ஆம் பக்கத் தொடர்

நபர்களும் புத்தளம் நகரில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவனல்லை கிரிங்கதெனிய மற்றும் கெரமினியவத்தை பகுதியைச் சேர்ந்த மொஹமட் இக்பால் மொஹமட் அஸ்ஹர் (26) மற்றும் மொஹமட் அன்வர் மொஹமட் அர்ஷாத் (28) ஆகிய இருவர் கடந்த வருடம் நவம்பர் 19 மற்றும் 28 ஆம் திகதிகளில் காணாமல் போனதாக, காணாமல் போன இருவரின் உறவினர்களால் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில்.

அவர்களைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன்படி, இப் பகுதியில் வசிக்கும் போதைப்பொருள் வர்த்தகருக்கு சொந்தமானதென கூறப்படும் ரம்புக்கனை, ஹுரிமலுவ பகுதியில் வீடொன்றின் பின்புறம் புதைக்கப்பட்ட அவ் இரு இளைஞர்களின் சடலங்கள் கடந்த 12ஆம் திகதி மீட்கப்பட்டன.

கொலையுடன் தொடர்புடைய ஹூரிமலுவே பர்ஹான் உட்பட நான்கு பிரதான சந்தேகநபர்கள் பிரதேசத்திலிருந்து தலைமறைவாகியிருந்ததுடன் மேலும் இரு சந்தேகநபர்கள் கடந்த 15 ஆம் திகதியன்று மாவனெல்லை மற்றும் வெலிஓயாவில் கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளுக்காக குற்றம் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு சந்தேக நபர்களை நேற்றுமுன்தினம் குற்றத்துடன் தொடர்புடைய வீட்டுக்கு, மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸார் அழைத்து சென்றனர்.

அதன்படி, ஹூரிமலுவே ஃபர்ஹானின் தந்தை வீட்டிலிருந்து இரண்டு வாள்கள் மற்றும் ஒரு இரும்பு கம்பியை பொலிஸார் மீட்டனர்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களையும் நேற்று (20) கேகாலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## நானுஓயா பஸ் விபத்து...

நானுஓயா பொலிசார் தெரிவித்துள்ளனர். கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி மாணவர்கள் சுற்றுலா சென்ற பஸ் வண்டியொன்றும் வேன் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். இந்த விபத்து நானுஓயாநுவரெலியா இடைவீதியில் நேற்று இரவு 7.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நானுஓயா பகுதியில் கோயில் ஒன்றுக்கு அருகில் உள்ள வளைவில் பயணித்துள்ள மேற்படி தேர்ஸ்டன் கல்லூரி மாணவர்கள் பயணித்த பஸ் டிக்கோயா பகுதியில் இருந்து நுவரெலியா நோக்கி சென்ற வேன் ஒன்றுடன் மோதியுள்ளதுடன் அதற்கு பின்னால் பயணித்த முச்சக்கர வண்டியடனும் மோதி பள்ளத்தாக்கில் வீழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் வேனில் பயணம் செய்த 6 நபர்களும் முச்சக்கர வண்டியில் பயணம் செய்த ஒருவருமாக ஏழு பேர் உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். இந்த செய்தி நேற்று இரவு அச்சுக்குப் போகும் வரை மாணவர்கள் பயணித்த பஸ்ஸில் பயணம் செய்த 41 பேர் உட்பட 51 பேர் காயம் அடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள தகவலை பொலிசார் தெரிவித்துள்ளனர். விபத்தின் போது பஸ் வண்டியின் பிரேக் சடுதியாக செயல்படாததன் காரணத்தினாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

## முஜுபுர் ரஹ்மான் MP... 03ஆம் பக்கத் தொடர்

முஜிபுர் ரஹூமானின் கடிதத்துக்கமைய பதவி விலகல் 2023 ஜனவரி 20ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாக செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

1981ஆம் ஆண்டு ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 64 (1)ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற செயலாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு இது பற்றி அறிவித்துள்ளார்.

## அடுத்த மூன்று... 03ஆம் பக்கத் தொடர்

சபையின் அதிகாரிகள், நேற்றுமுன்தினம் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டபோது,

இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

முட்டை இறக்குமதிக்கு முன்னிலையான நிறுவனம், 32 ரூபா 50 சதத்திற்கு, அதனை இறக்குமதி செய்ய விருப்பம் தெரிவித்துள்ளமையும் இதன்போது தெரியவந்துள்ளது.

எனினும், பறவைக் காய்ச்சல் காரணமாக, முட்டை இறக்குமதிக்கு இடமளிக்க முடியாதென கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கோப் குழுவின் கூட்டத்தில் தெரிவித்தார்.

## ஜெய்சங்கரிடம் பல்வேறு... 03ஆம் பக்கத் தொடர்

கடன் மறுசீரமைப்புக்கு இந்தியா பூரண ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியினர் நன்றிகளை தெரிவித்ததுடன் பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளனர்.

இந்த சந்திப்பு தொடர்பில் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்ததாவது;

இந்திய வெளிவிவகார அமைச்சரை நாம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினோம்.

இதன்போது மலையகத்துக்கு இந்திய வம்சாவளித் தமிழர்கள் வந்து 200ஆவது ஆண்டு நிறைவு பெறுவது தொடர்பில் எடுத்துரைத்தோம்.

இந்த நிறைவை முன்னிட்டு மலையகத்தில் பல்கலைக்கழகம் மற்றும் ஆசிரிய பயிற்சி கலாசாலை, தாதியர் பயிற்சி கல்லூரி என்பவற்றை இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் இந்திய அரசாங்கம் நிறுவவேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தோம்.

அத்துடன் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், என்பவற்றை பயில்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் அதற்காக இந்தியாவிலிருந்து பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் வரவழைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் நாம் வலியுறுத்தினோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மலையக மக்களின் பிரச்சினை தொடர்பில் மலையக கட்சிகளுடன் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளமை தொடர்பிலும் நாம் எடுத்துக் கூறினோம்.

ஜனாதிபதியை சந்திக்கும் போது இந்த விடயத்தை வலியுறுத்துமாறும் நாம் எடுத்துக்கூறியுள்ளோம். 200ஆவது வருட நிறைவை முன்னிட்டு மலையகத்தில் மேற்கொள்ளவேண்டிய திட்டங்கள் தொடர்பில் தமிழக அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளமை தொடர்பிலும் நாம் சுட்டிக்காட்டியுள்ளோம் எனத் தெரிவித்தார்.

## தராசு சின்னத்தில்...

உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்துள்ளார். எண்பதாண்டு காலமாக உள்ளூராட்சியில் நீதி மறுக்கப்பட்டிருந்த மலையகப் பெருந்தோட்டத்துறை மக்களுக்கு பிரதேச சபைச் சட்டத்திருத்தத்தின் ஊடாக வென்று எடுத்த நீதியை நிலைநாட்டவும் நுவரெலியா மாவட்டத்தில் வென்றெடுத்த புதிய பிரதேச சபைகளிலாவது திருத்தப்பட்ட பிரதேச சபைச் சட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தவும் மக்களுக்கு நீதி வேண்டி தராசு சின்னத்தில் போட்டியிட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுமித்ரா பீரிஸின்...

ரூபவாஹினி மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் நேரடி ஒளி/ஒலிபரப்பு செய்யப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி சுமித்ரா பீரிஸ் தனது 87ஆவது வயதில் நேற்று முன்தினம் காலை காலமானார்.

அன்னார் பிரபல இயக்குநர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் மனைவியாவார்.

இவரும் சிறந்த இயக்குநராக, ஒளிப்பதிவாளராக பல திரைப்படங்களில் பணியாற்றி சர்வதேச விருதுகளை பெற்றுள்ளார்.

## இந்தியாவுக்கு நன்றி...

கடந்த வருடம் வழங்கிய 3.9 பில்லியன் கடன் உதவி மற்றும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திற்கு வழங்கப்பட்ட உத்தரவாதங்களுக்காக நான் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். அக்கறையுள்ள நண்பர்கள் இருப்பது இலங்கையின் அதிஸ்டம் என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## மண்டைதீவு கடலில்...

மேற்கொள்வதாக கடற்படை தெரிவித்துள்ளது. இந்த முயற்சிகளின் நீட்சியாக, வடக்கு கடற்படை கட்டளையில் அனுப்பப்பட்ட கடலோர ரோந்துக் கப்பல் மண்டைதீவு தீவில் சந்தேகத்திற்கிடமான படகைக் கண்டது. கடற்படையினர் டிங்கி படகு சோதனையின் போது, 14 சாக்குகளில் சுமார் 496.54 கிலோ விரலி மஞ்சள் கடத்தி வரப்பட்டதை கண்டுபிடித்ததுடன், சட்டவிரோத செயலுக்கு பயன்படுத்தப்பட்ட டிங்கி படகுடன் 02 சந்தேக நபர்களை கைது செய்தனர். சந்தேகநபர்களால் கடலில் வீசப்பட்ட 01 சாக்கு மூட்டையில் சுமார் 48.30 கிலோ விரலி மஞ்சளையும் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

## தேர்தலை நடத்துவதால்...

நீதிப்பேராணை மீதான விசாரணையின் போதே, நிதியமைச்சின் செயலாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசிய சேவைகளுக்கான நிதியைக்கூட செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தேர்தலுக்கான நிதியை திரட்டுவதானது திறைசேரிக்கு கடும் சவாலான விடயம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேச கடன் தரப்படுத்தல் சுட்டெண்ணுக்கு அமைய இலங்கை பின்னிலையில் உள்ளதால் சர்வதேச சந்தையில் இருந்து நிதிபெறுவது சிரமமான விடயம் என நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உயர்நீதிமன்றத்திற்கு அறியப்படுத்தியுள்ளார்.

## மன்னாரில் எமக்கே...

மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மன்னார் மாவட்டத்தில், ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக போட்டியிடுவதற்கான கட்டுப் பணத்தை நேற்று (20) மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் செலுத்தியது.

இதன்போது ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

" மன்னார் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இம்முறை உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுகின்றது. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக போட்டியிட்டு மூன்று சபைகளை நாம் கைப்பற்றினோம்.

மக்களின் அதிகபட்ச ஆதரவில் இந்த வெற்றியை நாம் பெற்றுக்கொண்டோம். நாம் அமைத்த சபைகளின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் நேர்மையாகப் பணியாற்றி, மக்களுக்கு இயன்றளவு சேவைகளை செய்துள்ளனர்.

அந்த வகையில், இம்முறை தேர்தலிலும் நாம் அதிக ஆசனங்களையும் சபைகளையும் கைப்பற்றுவதற்கு மக்கள் உறுதுணையாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றோம்.

ஜனநாயக ரீதியில் இந்தத் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்பதில் நாம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். தேர்தல் செலவீனம் தொடர்பான புதிய சட்டமூலம் தேர்தலை நடத்துவதில் சிக்கலை உருவாக்கும் ஆரம்ப நடவடிக்கையாக இருக்கவும் முடியும். எனினும், ஐந்து தினங்களுக்குள் அந்த விடயங்கள் முடிக்கப்பட வேண்டும் என்ற ஏற்பாடு இருப்பதனால் தேர்தலை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு இருக்கின்றது. ஆகையால், அதனை மீறி தேர்தல் பிற்போடப்பட்டால் நீதிமன்றதை நாடுவோம்" என்று தெரிவித்தார்.

## 10,000 இந்திய வீட்டுத்திட்டத்தை...

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போதே இக்கோரிக்கை விடப்பட்டது.

தற்போதைய சூழ்நிலையில் தோட்ட மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என இதன்போது சுட்டிக்காட்டிய இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், இதனால் மலையக மக்கள் வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் வேலைக்காக செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மலையகத்தில் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான புதிய திட்டங்களை இந்தியா அறிமுகப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

இவ்விரண்டு கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான்,பொதுச் செயலாளரும் தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் நீர்வழங்கல் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் ராமேஸ்வரன், இ.தொ.காவின் சட்டப் பிரிவு பொறுப்பாளர் மாரிமுத்து, ஆலோசகர் மதியுகராஜா, சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளர் பாரத் அருள்சாமி ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

இக்கலந்துறையாடலில் இலங்கையின் பொருளாதார விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்த தருணத்தில் இந்தியா வழங்கிய உதவிகளுக்கு இதன்போது நன்றி தெரிவிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் ஏற்படப்போகும் பொருளாதார சவால்கள் மற்றும் அதனை எதிர்கொள்வது குறித்தும், தொடர்ந்தும் இந்தியா இலங்கைக்கு உதவிகளை வழங்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## பொருளாதார நெருக்கடிகளுக்கு...

இல்லத்தில் விசேட கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

இரு நாடுகளுக்குமிடையிலான அரசியல், பொருளாதார மற்றும் சமூக விடயங்களுடன், முதலீட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் இச்சந்திப்பின்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் அதற்கு இந்திய அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதிலும் கிடைத்துள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் பி.வி.நரசிம்ம ராவின் ஆட்சி ஆரம்பிக்கப்பட்ட 1991ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை இன்று எதிர்நோக்கியுள்ள அதே பொருளாதார நெருக்கடியை இந்தியாவுக்கு சந்திக்க நேரிட்ட போது இந்திய அரசாங்கம் தம்மிடமிருந்த தங்கக் கையிருப்புக்களை அடகு வைத்து அந்நெருக்கடிக்கு தீர்வு கண்டதை இந்திய வெளிவிவகார அமைச்சர் இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூர்ந்தார்.

இதனடிப்படையில், இலங்கை இன்று எதிர்நோக்கியுள்ள நிலைமையை இந்தியா நன்கு புரிந்துகொண்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் ஜெயசங்கர், இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு இந்திய அரசாங்கம் அனைத்து உதவிகளையும் வழங்கும் என்றும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது புதிய ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திட்டப் பட்டதுடன் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நடைமுறைப் படுத்தப்பட்ட சில அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் இணையவழியூடாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட உயர் பெறுபேற்றைக் கொண்ட சமூக அபிவிருத்தித் திட்டங்களின் (HICDP High Impact Community Development Project ) வரையறைகளை நீடிப்பது தொடர்பான இருதரப்பு ஒப்பந்தமும் இங்கு கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில், இலங்கை தரப்பில் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவும், இந்திய தரப்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவும் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தம் இந்திய அரசின் ஆதரவுடன் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பல சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வழிகாட்டுகிறது.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் சமூக மேம்பாட்டு வேலைத் திட்டங்களுடன் தொடர்புடைய இந்த ஒப்பந்தம் 2005 ஆம் ஆண்டு மே மாதம் கைச்சாத்திடப்பட்டது. அதன்படி தனிநபர் வேலை திட்டத்தின் வரையறை 300 மில்லியன் இலங்கை ரூபாவாக இருந்தது. எனினும் அது இன்று கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் மூலம் 600 மில்லியன் இலங்கை ரூபாவாக இரட்டிப்பாக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, பிரதமர் நரேந்திர மோடி 2017 ஆம் ஆண்டில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது, இந்திய அரசாங்கம் மற்றும் அந்நாட்டு மக்களால் இலங்கைக்கு வழங்கும் பரிசாக கண்டிய நடனத்துக்கான பயிற்சி நிறுவனமொன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் வைத்தார்.

கண்டி வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா மாளிகை வளாகத்துக்குள் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேற்படி கல்வி நிறுவனத்தை இச்சந்தர்ப்பத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இணையவழியூடாக திறந்து வைத்தார்.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் இந்நாட்டில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடமைப்புத் தொகுதியில் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டுள்ள 300 வீடுகளைக் (காலி, கண்டி, நுவரெலியா தலா 100 வீடுகள் வீதம்) கையளிக்கும் நிகழ்வும் இந்திய வெளிவிவகார அமைச்சரினால் இணையவழி தொழில்நுட்பத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டது.

60,000 வீடுகளைக் கொண்ட இந்த வேலைதிட்டத்தில் 50,000 வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. பெருந்தோட்டத்தைச் சேர்ந்த மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டு வரும் 4,000 வீடுகளில் மூன்றாம் கட்டச் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அதேநேரம் பணிகள் பூர்த்தியாகியுள்ள 3,300 வீடுகள் ஏற்கனவே பயனாளிகளிடம் கையளிக்கப் பட்டுள்ளன.

இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் 'மாதிரிக் கிராம வீட்டுத் திட்டம்' மூலம் அநுராதபுரம் மற்றும் பதுளை மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் அடையாள நிகழ்வும் இச்சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார விவகார அமைச்சின் செயலாளர், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## இந்தியாவின் உணர்வுபூர்வமான...

அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேறுவதற்கும், இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்கள் உட்பட அனைத்து சவால்களையும் எதிர்கொள்வதற்கும் இந்தியாவின் உணர்வுபூர்வமான ஒத்துழைப்பு அவசியமெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குமிடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன்போதே, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

## முஜிபுர் ரஹ்மானின்...

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு போட்டியிடுவதன் காரணமாக தான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகுவதாக முஜிபுர் ரஹ்மான் நேற்று பாராளுமன்றத்தில் விசேட உரை ஒன்றை நிகழ்த்தி அறிவித்தார்.

முஜிபுர் ரஹ்மானின் பதவி விலகலை அடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு நியமிக்கப்படவுள்ள பௌசி, முன்னாள் ஜனாதிபதிகள் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் அரசாங்கங்களில் அமைச்சராக பதவி வகித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அவர் பாராளுமன்றத்திற்கு தெரிவாகும் வாய்ப்பை இழந்தார்.

இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியில் வேட்பாளர் பட்டியலில் அடுத்த இடத்தில் அதிக விருப்பு வாக்குகளை பெற்றுள்ள அவர், தற்போது பாராளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

## தேசிய முறைப்பாட்டு...

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்காக இராஜகிரிய தேர்தல் செயலகத்தின் இரண்டாவது மாடியில் இந்த நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு கட்சி/குழு/வேட்பாளர் அல்லது எந்த நடவடிக்கைகள் தொடர்பான முறைப்பாடுகளையும் இங்கு பதிவு செய்ய முடியும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறுவது தொடர்பான முறைப்பாடுகளை தொலைபேசி/ தொலைநகல்/ வைபர் மற்றும் வாட்ஸ்அப் மூலமாகவும், மின்னஞ்சல் மற்றும் முகநூல் மூலமாகவும் தெரிவிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி இலக்கங்கள் – 011 2860056, 011 2860059, 011 2860069, பெக்ஸ் இலக்கங்கள் – 011 2860057, 011 2860062, வைபர்/ வாட்ஸ்அப் – 0719160000, இமெயில்– electionedr@gmail.com மற்றும் பேஸ்புக் – Election Commission of Sri Lanka, Tell Commission – Election Commission of Sri Lanka

## 12 அத்தியாவசிய...

வெங்காயத்தின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 180 ரூபாவாகும். ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனியின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 216 ரூபாவாகும்.ஒரு கிலோ கிராம் சிவப்பு அரிசியின் விலை 8 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 187 ரூபாவாகும்.

ஒரு கிலோ கிராம் நாட்டரிசியின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 179 ரூபாவாகும்.

ஒரு கிலோ கிராம் சம்பா அரிசியின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 210 ரூபாவாகும்.வெள்ளை நாட்டரிசி ஒரு கிலோ கிராமின் விலை 9 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 189 ரூபாவாகும்.இறக்குமதி செய்யப்படும் வெள்ளை நாட்டரிசி ஒரு கிலோ கிராமின் விலை 8 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 180 ரூபாவாகும். கீரி சம்பா அரிசியின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 239 ரூபாவாகும்.சிவப்பு பருப்பு ஒரு கிலோ கிராமின் விலை 7 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 370 ரூபாவாகும்.காய்ந்த மிளகாய் கிலோ கிராமின் விலை 50 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 1730 ரூபாவாகும்.கோதுமை மா ஒரு கிலோ கிராமின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன் புதிய விலை 235 ரூபாவாகும்.ஒரு கிலோ கிராம் நெத்தலியின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 1100 ரூபாவாகும்.

# கிழக்கின் குரல்



## மூதூர் கொட்டியாரக்குடா கடலரிப்பால் பெரும் பாதிப்பு

மூதூர் தினகரன் நிருபர்



திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கொட்டியாரக்குடாக் கடலில் அண்மைக்காலமாகவிருந்து ஏற்பட்டு வரும் பாரிய கடலரிப்பினால் தாம் பாதிப்பை எதிர்நோக்கி வருவதாக, அப்பிரதேச மீனவர்கள் நேற்று (20) தெரிவித்தனர்.

கொட்டியாரக்குடாக் கடற்கரையை அண்டி அமைந்துள்ள மீன் வாடிகள் மற்றும் குடியிருப்புகள் கடலரிப்பினால் பாரிய சேதத்துக்குள்ளாகி வருவதுடன், இதனால் தாம் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாகவும், மீனவர்கள் தெரிவித்தனர்.

இக்கடற்கரையோரத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பிலிருந்து பாதுகாப்புப் பெறும் வகையில் தேவையான இடங்களில் கல்வேலிகளும் அமைக்கப்படவில்லை. இதனால், கரையோரத்திலுள்ள வளங்கள் படிப்படியாக சேதமடைந்து வருகின்றன.

எனவே, மூதூர் கொட்டியாரக்குடாக் கடற்கரையோரத்தில் காணப்படும் வளங்களை கடலிரிப்பிலிருந்து உரிய முறையில் பாதுகாக்கும் வகையில் தேவையான இடங்களில் கல்வேலிகளை அமைத்துத் தருமாறும் இந்நடவடிக்கைக்கு உதவுவதற்காக உரிய அதிகாரிகளை முன்வருமாறும் மீனவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## தேர்தல்; மட்டு. செயலகத்தில் விசேட கலந்துரையாடல்



மட்டக்களப்பு குறுப், புதிய காத்தான் குடி தினகரன் நிருபர்கள்

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காலத்தின் போது பதவிநிலை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விசேட கலந்துரையாடலொன்று, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (19) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலரும் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தெரிவத்தாட்சி அலுவலருமான எம்.வீ.எம். சூபியான் தலைமையிலும் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்தின் வழிகாட்டலின் கீழும் இக்கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது, தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள பதவிநிலை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டிய கடமைகள், பொறுப்புகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

## மட்டக்களப்பில் இன்று தைப்பொங்கல் விழா

காரைதீவு குறுப் நிருபர்

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் தைப்பொங்கல் விழா இன்று (21) முற்பகல் 9.30மணிக்கு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவரும் சைவப் புரவலருமான விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், சங்க பொதுச் செயலாளர், சட்டத்தரணி மு.கணேசராசா வரவேற்புரை ஆற்றவுள்ளார். சிறப்புரையை கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் ச.நேசராஜா ஆற்றவுள்ளார்.

இதன்போது, பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

## அக்கரைப்பற்றில் கஞ்சாவுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

பாலமுனை தினகரன் நிருபர்

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு,

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம் நேற்று (20) உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோளாவில் தீவுக்காலை பகுதியில் கஞ்சா வைத்திருந்த இச்சந்தேக நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசியத் தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட இச்சந்தேக நபரிடம் இருந்து 1,250 மில்லி கிராம் கஞ்சாவையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இதனைத் தொடர்ந்து, இச்சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## நாமல்வத்த நெற்செய்கையில் ஒருவித நோய்த் தாக்கம்

றொட்டவெவ குறுப் நிருபர்



திருகோணமலை மாவட்டத்தின் நாமல்வத்த கிராமத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட நெல் வேளாண்மைச் செய்கையில் ஒருவித மஞ்சள் நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக, விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

வருடா வருடம் நெல் வேளாண்மைச் செய்கைகையை மேற்கொண்டு வரும் நிலையில், இம்முறை தமது வேளாண்மைச் செய்கையில் நோய்த் தாக்கம் காணப்படுவதாகவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

நெல் வேளாண்மைச் செய்கையில் ஏற்பட்டுள்ள இந்நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பீடைநாசினிகளைப் பயன்படுத்திய போதிலும், அது எவ்வித பயனளிக்கவில்லையெனவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

நாமல்வத்த கிராமம் மீள்குடியேற்றப்பட்ட கிராமமாகும். விவசாயத்தை நம்பி வாழ்ந்து வருகின்றபோது தமது விவசாயச் செய்கையில் நட்டத்தை எதிர்நோக்கி வருவதாகவும், அவர்கள் தெரிவித்தனர்.

## ஓட்டமாவடி பிரதேசத்தில் தொழுநோய் கருத்தரங்கு

கல்குடா தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழுநோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் தோறும் பல்வேறு வேலைத்திட்டங்கள், மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் குணசிங்கம் சுகுணனின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், பாடசாலை மாணவர்கள் மத்தியில் தொழுநோய் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கருத்தரங்குகள் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி, வைத்தியர் எம்.எச்.எம். தாரிக்கின் தலைமையில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இது தொடர்பான கருத்தரங்கொன்று நேற்று (20) ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் நடத்தப்பட்டது. இதன்போது, தொழுநோயின் அறிகுறிகள், அந்நோயின் தாக்கம், அதிலிருந்து பாதுகாப்பு பெறுவது, அந்நோய் ஏற்படும் பட்சத்தில் அதற்கு சிகிச்சை பெறும் வழிமுறை தொடர்பாக இக்கருத்தரங்கில் விளக்கமளிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அலுவலக மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் ஏ.எல்.நௌபர், சுகாதாரப் பரிசோதகர் யூ.எல்.எம்.ஜின்னாஹ், தாதி உத்தியோகத்தர் எச்.ஏ.என்.பிரியங்கனி உள்ளிட்டோர் கலந்துகொண்டு பங்காற்றினர்.

## 43 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



அட்டாளைச்சேனை குறுப், அக்கரைப்பற்று மத்திய நிருபர்கள்

சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கடந்த புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், 43 மாணவர்கள் பயனடைந்தனர்.

மனிதாபிமான வேலைத்திட்டம் 2023 இன் கீழ் நன்கொடையாளர்களின் பங்களிப்புடன் இக்கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிரான்குளத்தில் ஒரு இலட்சம் நாற்றுகள் நடுகை திட்டம்



ஆரையம்பதி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான்குளம் கிராமத்தில் பட்டிப் பொங்கல் விழாவுடன் ஒரு இலட்சம் நாற்றுகள் நடுகை வேலைத்திட்டமும் அண்மையில் நடைபெற்றது.

உலகத் தமிழர் மகுடத்தின் பசுமை புரட்சித் திட்டத்தின் கீழ் அவ்வமைப்பின் தலைவர் இரா.நடேசபதி தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக செயலாளர் உட்பட மாவட்ட செயலக உயர் அதிகாரிகளும் மற்றும் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## சங்கமன் கிராமத்தில் 2 குடும்பங்களுக்கு வீடுகள்



காரைதீவு குறுப் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சங்கமன் கிராமத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இரண்டு குடும்பங்களுக்காக கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டன.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் வழிகாட்டுதலின் கீழ், மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம் கல்வி சமூகப் பண்பாட்டு அறப்பணி மன்றத்தின் அனுசரணையில் இவ்வீடுகள் கட்டப்பட்டன.

திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன், உதவிப் பிரதேச செயலாளர் க.சதிசேகரன், மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம் கல்வி சமூக பண்பாட்டு அறப்பணி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இருவருக்கு இடமாற்றம்

கிண்ணியா மத்திய நிருபர்



கிழக்கு மாகாணத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அவர்கள் இருவரும் தத்தமது அலுவலகத்தில் நேற்று முன்தினம் (19) கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர்.

திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய

சி.சிறீதரன், பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய தி.ரவி, திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

## களுவாஞ்சிக்குடியில் டெங்கு பரிசோதனை

களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட கிராமங்களிலுள்ள வீடுகளில் டெங்கொழிப்பு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், வைத்தியர் உதயசூரியனின் பணிப்புரைக்கமைய டெங்கொழிப்பு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில், ஒந்தாச்சிமடத்தில் நுளம்புகள் பெருகும் இடங்களை இனங்கண்டு பொதுமக்களுக்கு சுகாதாரப் பரிசோதகர்கள் அறிவுறுத்தல்களை வழங்கியதுடன், கிணறுகளில் மீன் குஞ்சுகளை விடும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

## உப்புக்காச்சிமடு கிராமத்தில் யானைகளை கட்டுப்படுத்த ஏற்பாடு

மூதூர் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் மேற்கு உப்புக்காச்சிமடு கிராமத்தினுடைய கரையோரப் பகுதியிலுள்ள தோட்டங்களில் நுழையும் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்துவதற்காக பற்றைகளை வெட்டிச் சுத்தப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மூதூர் உப்புக்காச்சிமடு மீள்குடியேற்ற அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இச்சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மூதூர் மேற்கு உப்புக்காச்சிமடு கிராமத்திலுள்ள தோட்டங்களில் இரவு வேளைகளில் அடிக்கடி காட்டு யானைகள் நுழைவதினால், மக்கள் மிகவும் அச்சமடைந்துள்ளனர். இந்நிலையில், ஆற்றங்கரைகளையும் வீதியோரங்களையும் அண்டி அமைந்துள்ள பற்றைகளை வெட்டிச் சுத்தப்படுத்தப்படும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்திய அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள்

ஒலுவில் விசேட நிருபர்



அம்பாறை மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள், உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை அம்பாறை உதவித் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் நேற்று (20) செலுத்தியுள்ளன.

இதேவேளை இறக்காமம், அக்கரைப்பற்று மாநகர சபை, திருக்கோவில் , அட்டாளைச்சேனை, தமண, நாமல் ஓயா, காரைதீவு ஆகிய 7 உள்ளூராட்சி சபைகளுக்கு வேட்புமனுக்களை தேசிய மக்கள் சக்தி சார்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எல்.ஜீ.வசந்த பியதிஸ்ஸ தலைமையிலான குழுவினர் சமர்ப்பித்துள்ளனர்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி உட்பட சுயேட்சைக் குழுக்களும் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன. நாவிதன்வெளி, சம்மாந்துறை, காரைதீவு, நிந்தவூர், ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில் உள்ளிட்ட பல உள்ளூராட்சி சபைகளுக்கு கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

தேசிய காங்கிரஸ் அக்கரைப்பற்று மாநகர சபை, அக்கரைப்பற்று, இறக்காமம், சம்மாந்துறை, நாவிதன்வெளி, நிந்தவூர், அட்டாளைச்சேனை, பொத்துவில் ஆகிய 7 பிரதேச சபைகள் உட்பட 8 உள்ளூராட்சி சபைகளுக்கு கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாக, அக்கரைப்பற்று மாநகர முதல்வர் ஏ.அகமட் சக்கி தெரிவித்தார்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2023 ஜனவரி 21
சனிக்கிழமை

# மனநலம் பாதிக்கப்பட்டவர்களை புறக்கணிப்பதற்கு இடமளிக்கக்கூடாது

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

**கோப்பாய் குறூப் நிருபர்**



வடக்கு மாகாணத்திலுள்ள சகல மாவட்டங்களையும் இணைக்கக் கூடிய வகையில் மனநலம் குன்றியவர்கள் மற்றும் ஒட்டிசம் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சை மற்றும் வழிகாட்டல்கள் மாகாண சுகாதார அமைச்சுக்குட்பட்ட அதிகார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுத்தப்படும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் நான் ஆளுநராக பதவியேற்ற காலத்தில் மனநலம் குன்றியவர்கள் மற்றும் ஒட்டிசம் நோயினால் பாதிக்கப்பட்டவர்களை மாவட்ட ரீதியாக ஒருங்கிணைக்கக் கூடிய நடைமுறை காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

இந்நிலையில் இச்செயற் திட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்காக சுகாதார அமைச்சின் கீழ் இணைப்பாளராக வைத்தியர் ஒருவரை நியமித்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

சிலர் மனநலம் குன்றியவர்களுக்கு ஏதும் செய்துவிடக் கூடாது அல்லது அவர்களை அப்படியே விட்டு விடலாம் என்ற குறுகிய நோக்கங்களை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

மனநலம் குன்றியவர்கள் மற்றும் ஒட்டிசம் நோயினால் பாதிக்கப்பட்டவர்களை சரியான முறையில் பராமரித்து அவர்களுக்கான சிகிச்சைகள் வழிகாட்டல்கள் மாகாணத்தில் வழங்கப்பட வேண்டும். அவர்களை புறக்கணிப்பதற்கு இடமளிக்கக்கூடாது.

ஆகவே வடக்கு சுகாதார அமைச்சுக்குரிய அதிகாரங்கள் உரிய முறையில் செயற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். இராணுவ தளபதியுடனான சந்திப்பில் காணி விடுவிப்பு தொடர்பில் பேச்சு!

**யாழ்.விசேட நிருபர்**



யாழ். மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனை, யாழ். மாவட்ட இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ண போதொட்ட மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பில், யாழ்ப்பாண மாவட்டத்தில் விடுவிக்கப்படாத காணிகளின் விபரங்கள் தொடர்பாகவும், முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களை மீளக்குடியேற்றுதல் தொடர்பாகவும், விவசாயம் சார் உற்பத்திகளை ஊக்குவித்தல் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தின் அண்மைக்கால நிலைப்பாட்டின் மேம்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக செயலர் ம.பிரதீபன், மாவட்ட மேலதிக செயலர் (காணி) எஸ்.முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல்

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்கான உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனு நேற்று நண்பகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய மூன்று பிரதேச சபைகளில் கரைச்சி பிரதேச சபைக்கு மாத்திரம் போட்டியிடுவதற்கான வேட்புமனு சுயட்சைக் குழு 01 தலைவர் ஸ்டிபன் தலைமையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# வவுனியாவில் பொதுஜன பெரமுன வேட்புமனு தாக்கல்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா மாவட்டத்தில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக பொதுஜன பெரமுன நேற்று வேட்புமனுவை தாக்கல் செய்தது.

கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கே. காதர் மஸ்தானின் தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் தமது வேட்புமனுவை கையளித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் 5 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ள நிலையில் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை ஆகிய இரு உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காகவே இவ்வாறு நேற்று வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது கட்சியின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப்பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

# வடக்கில் 17,555 பரீட்சாத்திகள் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்

**கோப்பாய் குறூப் நிருபர்**



வட மாகாணத்தில் 139 பரீட்சை நிலையங்களில் 17 ஆயிரத்து 555 பரீட்சாத்திகள் கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ளதாக வடமாகாண கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை கல்வி கட்டமைப்பில் உயரிய பரிசாக கருதப்படும் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 15 ஆயிரத்து 156 பாடசாலை பரீட்சாத்திகளும் 2 ஆயிரத்து 399 தனிப்பட்ட பரீட்சாத்திகளும் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

ஆகவே பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்கள் நம்பிக்கையுடன் தோற்றி வெற்றி பெற வேண்டும் என வடமாகாண கல்விப் பணிப்பாளர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் சேவை நலன் பாராட்டு விழா

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் வைத்திய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் இரண்டு வைத்தியர்கள் பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார தாதிய உத்தியோகத்தர்களுக்கான பாராட்டு விழா மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தர்மராஜா வினோதனின் தலைமையில் முருங்கன் டொன் பொஸ்கோ விழா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

தாய் சேய் நலன் வைத்திய அதிகாரி வெற்றி நாதன் பிராந்திய பற்சிகிச்சை வைத்திய அதிகாரி செல்வி ஸ்ரீதேவி வேதவனம், பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர் வடுவத்த ஆகியோர் சேவையிலிருந்து ஓய்வு பெற்று செல்கின்றனர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த






இந்நிகழ்வில் டொன் பொஸ்கோ பங்குத்தந்தை, வைத்தியகலாநிதி டெனி, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள். ஒஸ்மான் சாள்ஸ், ரூபன் லெம்பேட், சில்வா, நிஷாந்தன் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் அவர்களின் சேவைக்கால அனுபவங்கள் வைத்தியர்களால் பகிரப்பட்டு பாராட்டுக்களும் நினைவுப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இத்துடன் மன்னார், நானாட்டான், மடு, முசலி போன்ற சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு சுகாதார உத்தியோகத்தர்களால் கலை நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன.

# வவுனியா மாவட்டத்தில் நெற்செய்கையில் நெமடோட் நோய்த் தாக்கம் அதிகரிப்பு

## பிரதி மாகாண விவசாய பணிப்பாளர்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா மாவட்டத்தில் நெற்செய்கையில் நெமடோட் என்ற நோயின் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பொன்னையா அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று (20) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாடளாவியரீதியில் நெற்செய்கையில் மஞ்சள் நிறமாதல் மற்றும் வளர்ச்சி குன்றுதல் அவதானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தின் உளுக்குளம், மடுகந்த மற்றும் அவுசதப்பிடடிய போன்ற விவசாய பிரிவுகளில் நெற் பயிரில் நெமடோட் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கு நெமடோட் தாக்கம், பனிப்பூச்சியின் தாக்கம், முறையற்ற பசளை பயன்பாடு, கபிலநிறப்புள்ளி நோய் போன்ற காரணங்கள் குறிப்பிடப்படுகின்றது.

நெமடோட் தாக்கத்தை நெற்பயிர் தண்டு மஞ்சள் கபில நிறமாதல், நெற்பயிரின் வளர்ச்சி குன்றுதல் மேற்குறிப்பிட்ட இயல்புகளை காட்டும் நெற்பயிரை வேர் தொகுதிக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அகற்றி அதன் வேர்த்தொகுதியை கழுவி அவதானிக்கவும், பால் வேரின் நுனிப்பகுதி கொக்கி மட்டை போன்று (கொக்கி போன்று வளைந்த) வேர் தொகுதியில் முடிச்சு காணப்படும் போன்றவாறு கண்டறியலாம். நீர் பாய்ச்சும் போது வயற் துண்டின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு செல்லாதவாறு நீ பாய்ச்ச வேண்டும், விவசாய உபகரணங்களை ஒரு வயலிலிருந்து மற்றுமொரு வயலிற்கு கொண்டு செல்லும் போது நன்கு சுத்தப்படுத்திச் செல்லவும், ஒரு வயலிலிருந்து மற்றுமொரு வயலிற்கு செல்லும் போது பாதங்களை சுத்தப்படுத்திச் செல்லவும், தாக்கத்தை கண்டறிந்ததன் பின்னர் இறுதி தீர்வாக நெமடோட் நாசினியான எபமெக்சினை இடவும்.

இதுதொடர்பான மேலதிக தகவல்களை அறிந்துகொள்ள அருகிலுள்ள கமநலசேவைத் திணைக்களங்களை நாடவும் எனத் தெரிவித்தார்.

# வடமாகாண பொலிஸ் அத்தியட்சகர் யாழ். மாவட்ட செயலாளர் சந்திப்பு



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகிந்த குணரட்ண மற்றும் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்ன ஆகியோர் மரியாதை நிமித்தமாக சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இச்சந்திப்பு இடம்பெற்றது. யாழ்.மாவட்ட செயலாளராக அம்பலவாணர் சிவபாலசுந்தரன் கடந்த புதன்கிழமை புதிதாக பதவியேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போதைக்கு அடிமையானவர் உயிரிழப்பு

**யாழ்.விசேட நிருபர்**

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான நபரொருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொடிகாமம் வரணி பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவர் கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதி போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கொடிகாமம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸார் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளை சந்தேகநபரை விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், கடந்த 10ஆம் திகதி திடீர் சுகவீனம் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளின் போது, அளவுக்கு அதிகமான போதைப்பொருள் பாவனை காரணமாகவே சுகவீனமுற்று உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக போதைப்பொருள் விற்பனை ஒருவர் கைது



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள கடையொன்றில் போதைப்பொருளை விற்கும் நோக்குடன் அதனை உடைமையில் வைத்திருந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள கடையொன்றில் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாக யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், கடையில் சோதனை நடாத்திய வேளை, அதன் உரிமையாளரின் உடைமையிலிருந்து 100 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை பொலிஸார் மீட்டனர்.

அதனையடுத்து உரிமையாளரை கைது செய்த பொலிஸார் , அவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை கொழும்பிலிருந்து போதைப்பொருட்களை யாழ்ப்பாணத்திற்கு கடத்தி வந்து விற்பனை செய்து வந்ததாக தமது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் , அவருடன் தொடர்புடைய போதைப் பொருள் வலையமைப்பை சேர்ந்தவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மீசாலையில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை கிழக்குப்பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹேந்திரா பிக்கப் ரக வாகனத்தில் கஞ்சாவை கொண்டு சென்ற சமயமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.


சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பாலிதவின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் டார்வின் தலைமையிலான பொலிஸ் குழுவினரின் விசேட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 352 கிராம் 250 மில்லி கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன் பிக்கப் ரக வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய நபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## சடலம் மீட்பு



நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான நிமால் பியதிஸ்ஸவின் சகோதரர், கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஹைபொரஸ்ட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிங்கந்தலாவ கிராமத்தின் வீடொன்றிலுள்ள கிணற்றிலிருந்து இவர் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளார். பிங்கந்தலாவை கிராமத்தைச் சேர்ந்த 57 வயதான ஒப்பநாயக்க டெனிசன் ஜயதேவ என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் கடந்த (18) மாலை தனது கிராமத்தில் நடைபெற்ற விசேட நிகழ்வுக்கு சென்று, அங்கு மதுஅருந்திய நிலையில் இரவு வீடு திரும்பியுள்ளார்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் காலை (19) காலை வரை அவர், வீட்டுக்கு வராமையால், அவரை வீட்டார் தேடிய போதே வீட்டுக்குச் செல்லும் வழியிலுள்ள கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் வீட்டார் ஹைபொரஸ்ட் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், வலப்பனை நீதிமன்ற நீதவானின் உத்தரவுக்கு அமைய, சடலத்தை மீட்டு மரண விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.





மனித அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் பாடசாலை, பாலர் பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலுள்ள பிள்ளைகளுக்கு சமூக உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய லூல்கந்துர தோட்டப் பாடசாலையில் இத்திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. மனித அபிவிருத்தி தாபனத்தின் திட்டமிடல் அதிகாரி லோகேஸ்வரி,அதிபர் ஆர். மகேந்திரனிடம் இதற்கான உணவுத் தானியங்களை வழங்கி வைப்பதை காணலாம். (படம். மாவத்தகம தினகரன் நிருபர்)

## தேர்தல் எக்காரணம் கொண்டும் தடைப்படாது எஸ்.பி.திஸாநாயக்கா எம்.பி உறுதி



உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எக்காரணம் கொண்டும் தடைப்படாது என நம்புகிறோம் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டம் ஹங்குராங்கெத்த மற்றும் மஸ்கெலியா ஆகிய பிரதேச சபைகளில் பொதுஜன ஐக்கிய முன்னணி இம்முறை போட்டியிடுகின்றது.

இவ்விரு சபைகளில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் அலுவலகத்தில் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும்,மாவட்ட செயலாளருமான நந்தன கலபடவிடம் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க (20) நண்பகல் கையளித்தார்.

இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், உள்ளூராட்சி தேர்தலுக்கு எதிராக சிலர் நீதிமன்றத்தை நாடியுள்ளனர். இந்நிலையில் நீதிமன்ற தீர்ப்பு எவ்வாறாக அமையும் என்பது எமக்கு தெரியாது.

இருப்பினும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இடம்பெறும் என நாம் நம்புகிறோம் என தெரிவித்தார்.

மேலும் நுவரெலியா மாநகர சபையை இம்முறை பொதுஜன ஐக்கிய முன்னணி கைப்பற்றுமா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் கட்டாயம் சகோதர கட்சிகளை இணைத்துக் கொண்டு மாநகர சபையை கைப்பற்றுவோம் என மேலும் தெரிவித்தார்.

## மாத்தளை நந்தமித்திர ஏக்கநாயக்க ஹொக்கி விளையாட்டரங்கு புனரமைப்பு

### துருக்கி அரசாங்கம் நிதியுதவி

**மாத்தளை சுழற்சி நிருபர்**



துருக்கி நாட்டு நிதி உதவியுடன் மாத்தளை நந்தமித்திர ஏக்கநாயக்க ஹொக்கி விளையாட்டரங்கு சகல வசதிகளுடன் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விளையாட்டு துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்தார்.

ஹொக்கி விளையாட்டு துறையில் முன்னணி மாவட்டமாக விளங்கும் மாத்தளை மாவட்டத்தில் மாநகர சபை பிரிவில் அமைக்கப்பட்டுள்ள நந்தமித்திர ஏக்கநாயக்க சர்வதேச விளையாட்டரங்கு பல வருடங்களாக புனரமைக்கப்படாமல் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.


இவ்விளையாட்டரங்கில் மீண்டும் நவீன முறையில் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான நிதியுதவியை வழங்குவதற்கு துருக்கி நாட்டு அரசாங்கம் முன்வந்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா







**ஹற்றன் சுழற்சி நிருபர்**

நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் ஆர்.சிவலிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் கொட்டகலை வூட்டன் ஹில்ஸ் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக நுவரெலியா வலய கல்வி பணிப்பாளர் டீ.எம்.பி.லசந்த அபேரட்ண மற்றும் சிறப்பு அதிதிகளாக மேலதிக மற்றும் கோட்ட கல்வி பணிப்பாளர்கள், விசேட அதிதிகளாக கல்வியற் கல்லூரியின் பீடாதிபதிகள், பிரதேச பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவ சங்கம், பெற்றோர்கள் சங்கம், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களின் கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் கடந்த ஆண்டுகளில் தேசிய ரீதியில் நடைபெற்ற பரீட்சைகளில் அதிசிறந்த சித்திகளை பெற்ற மாணவர்களுக்கும் மற்றும் போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கும் பதக்கங்களும், சான்றிதழ்களும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது பிரதம அதிதியாக கலந்துகொண்ட நுவரெலியா வலய கல்வி பணிப்பாளர் மற்றும் ஏனைய அதிதிகளின் சேவைகளை பாராட்டி பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களால் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

## நுவரெலியாவில் சுதந்திர மக்கள் கூட்டமைப்பு கட்டுப்பணம் செலுத்தியது



**தலவாக்கலை குறூப் நிருபர்**

நுவரெலியா மாவட்டத்தில் 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிடும் சுதந்திர மக்கள் கூட்டமைப்பு ஹெலிகெப்டர் சின்னத்தில் கட்டுப்பண தொகையை நேற்று முன்தினம் (19) தேர்தல் அலுவலகத்தில் செலுத்தியது. இதன்படி, நுவரெலியா மாநகர சபை, தலவாக்கலை லிந்துலை நகர சபை, ஹற்றன் டிக்கோயா நகரசபை, ஹங்குரான்கெத்த, வலப்பனை, கொத்மலை, நுவரெலியா, அகரப்பத்தனை, கொட்டகலை, நோர்வூட், அம்பகமுவ, மஸ்கெலியா ஆகிய உள்ளூராட்சி சபைகளின் சார்பில் கட்சி கட்டுப்பணத்தை செலுத்தியது. இதன்போது, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ, சுதந்திர மக்கள் முன்னணியின் செயலாளர் கலாநிதி ஜீ. வீரசிங்க, நுவரெலியா பிராந்திய சபையின் உப தலைவர் சரத்குமார உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## ஜீவனின் வெற்றியை கொண்டாடிய மலையகம்





ஜீவன் தொண்டமான் அமைச்சராக பதவியேற்றதையடுத்து மலையக மக்கள் பட்டாசு கொளுத்தி இனிப்பு வழங்கி பெரும் ஆரவாரத்துடன் கொண்டாடினர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் நேற்றைய தினம் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரவை அமைச்சராக நியமிக்கப்பட்டு ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றார்.

இதனை கொண்டாடும் விதமாக ஹற்றன் மற்றும் கொட்டகலை பகுதிகளில் பட்டாசு வெடித்தும், இனிப்பும் வழங்கியும் மகிழ்ந்தனர்.

## வங்கியில் 4 கோடி ரூபா திருட்டு

### கூட்டுறவு வங்கி தலைவர் பொலிஸாரால் கைது

**அக்குறணை குறூப் நிருபர்**

கட்டுகஸ்தோட்டைப் பிரதேசத்திலுள்ள வங்கியொன்றில் 4 கோடி ரூபாவுடன் தலைமறைவாகியிருந்த கூட்டுறவு வங்கி தலைவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுகஸ்தோட்டை, கஹல்ல, களுகல என்ற இடத்தில் இயங்கிய வந்த வங்கியில் 4 கோடி ரூபா திருடிய குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கூட்டுறவு சிக்கன வங்கி சுமார் 35 வருடங்களுக்கு மேல் இயங்கி வந்த ஒன்றாகும். அதன் அங்கத்துவப் பணத்தில் நிலையான வைப்பிலுள்ள தொகையே இவ்வாறு கையாடல் செய்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

அதன் தலைவர் கட்டுகஸ்தோட்டைப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததைத் தொடர்ந்து கைதாகியுள்ளார்.

வங்கியில் பண வைப்பு செய்தவர்கள் தமது நிலையான அங்கத்துவப் பணத்தை மீள பெற முயற்சித்த போதே மேற்படி தொகை கையாடல் செய்யப்பட்டமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்தே கைது இடம்பெற்றுள்ளது.

இப்பிரதேசத்தில் அதிகமானோர் செங்கற்தொழிலில் ஈடுபட்டு வருபவர்களாகும்.

கூலி வேலை செய்து சேகரித்த பணத்திலிருந்தே இவ்வாறு வைப்புச் செய்ததாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

சந்தேகநபரை கண்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## பழைய மாணவர்கள் சங்க பொதுக்கூட்டம்

**எம்.ஏ.அமீனுல்லா**

கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்க பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை (21) கண்டியிலுள்ள 'கிரேன் கண்டியன் ஹோட்டலில்' நடைபெறும். மேலும் அன்றைய தினம் பழைய மாணவர் சங்க நிர்வாகத் தெரிவு மற்றும் விளையாட்டுக் கழகத்திற்கான நிர்வாக தெரிவு என்பன இடம்பெறும் என சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜீ .ஜீ . ஹேவமதீஷ் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல்

## முறையற்ற அரச சொத்துக்களின் பயன்பாடு தொடர்பில் முறையிடலாம்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

தேர்தல் காலப்பகுதிக்குள் அரச சொத்துக்களை சட்டவிரோதமாக பயன்படுத்தும் கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்கள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தேர்தல் ஆணைக்குழு அமைந்துள்ள கட்டடத்தின் இரண்டாம் மாடியில் இந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 0112860056, 0112860059, 0112860069 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து முறைப்பாடுகளை வழங்க முடியும்.மேலும் 0112860057 மற்றும் 0112860062 என்ற இலக்கங்களுக்கு தொலைநகல் ஊடாகவும் , 071 9160000 என்ற இலக்கத்தின் மூலம் வட்ஸ்அப் மற்றும் வைபர் ஊடாகவும் முறைப்பாடு அளிக்க முடியும். electionedr@gmail.com என்ற மின்னஞ்சலுக்கும் முறைப்பாடுகளை அனுப்பி வைக்க முடியும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## வனப்பகுதிகளுக்கு விஷமிகள் தீ வைப்பு

**மஸ்கெலிய தினகரன் நிருபர்**



மத்திய மலைநாட்டில் கடும் வெப்பம் நிலவிவருகிறது. இதனால் நீர்த்தேக்கங்களில் நீர் வற்ற தொடங்கியுள்ளது. அது மட்டுமின்றி அப்பகுதிகளிலுள்ள பற்றைகளுக்கும்,வன பகுதிகளிலும், மானாபுற்கள் வளர்ந்த பகுதிகளுக்கும் தீ வைப்பு சம்பவங்கள் அதிகரித்துவருகின்றன.

வனவிலங்குகளை வேட்டையாடும் பொருட்டும் விறகுகள் சேகரிக்கும் நோக்கிலும் விசமிகள் வனப்பகுதிகளுக்கு தீ வைத்துவருகின்றனர்.

இதனால் வனவிலங்குகள் அதிகளவில் அழிந்து போய் விடும் அபாயமும் தோன்றியுள்ளது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட வன பாதுகாப்பு அதிகாரிகள் உடன் கவனம் செலுத்த வேண்டும்.

## மாணவர் பாராட்டு விழா

**புசல்லாவை தினகரன் நிருபர்**

பன்விலை மடுல்கலை நெல்லிமலை சிவனேஸ்வரா தமிழ் வித்தியாலய மாணவர் பரிசளிப்பு விழாவும் சின்னம் சூட்டும் விழாவும் நாளை முற்பகல் 10.00 மணிக்கு பாடசாலை அதிபர் எம்.நவநீதன் தலைமையில் இடம்பெறும். மலையக கலாசார ஒன்றியத்தின் அனுசரணையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வத்தேகம கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி டப்ளிவ்.எம்.டீ.என் குணரட்ண பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். கல்விப் பணிப்பாளர் ஐ.ஹாசிம் மலையக கலாசார ஒன்றியத்தின் தலைவர் கே.ஜே.சிவராஜேஸ்வரன் மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் ஆர்.செல்வகுமார் ஏ ஸ்ரீ குமார் ஆகியோரும் அயல் பாடசாலை அதிபர்களும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இந்நிகழ்வில் இடம்பெறவுள்ளது. மேலும் பன்விலை கல்விக்கோட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவி கி.ஹம்ருத்திரா (181புள்ளிகள்) உள்ளிட்ட பலரும் பாராட்டப்படவுள்ளனர்.

# தேசிய புதுபிக்கத்தக்க வலு சக்தி உற்பத்தியிலுள்ள பிரச்சினைகள்:

# தீர்க்குமாறு ஜனாதிபதிக்கு கோரிக்கை முன்வைப்பு



படம்: சுதத் மலவீர

தேசிய புதுபிக்கத்தக்க வலு சக்தி தொழில் துறையினர் எதிர்காலத்தில் தேசிய மின்கட்டமைப்புக்கு தங்களால் வழங்கப்படும் மின்னுற்பத்திக்கு பாதிப்பு ஏற்படலாம் என புதுபிக்கத்தக்க வலு சக்தி சங்கத்தின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சிறு மின்னுற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் வருண தஹநாயக்க இது தொடர்பில் கருத்து தெரிவித்த போது, இலங்கை தேசிய மின்கட்டமைப்புக்கு புதுபிக்கத்தக்க வலு சக்தி வருடத்திற்கு 15%,16% வீத பங்களிப்பை வழங்கி வருகிறது. இன்றை நிலையில் சிறு மின்னுற்பத்தி நிலையங்களில் 7000 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இவற்றுக்கான பராமரிப்பு வேலைகளை செய்ய முடியாத சூழ்நிலைக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவித்தார். இதற்கு தீர்வை பெற்றுத் தருமாறு ஜனாதிபதி மற்றும் மின்சக்தி அமைச்சருக்கு வேண்டுகோள் விடுப்பதாக தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, பொருளாதார நெருக்கடியும் இதற்கான காரணமாக நாம் கருதுகிறோம். இன்றைய மின் கண்டன அதிகரிப்பு அனைவருக்கும் பெரும் தாக்கத்தை செலுத்திலுள்ளது. இதை நிறுத்தக் கூடிய சக்தி எமக்குள்ளது. தேசிய மின் கட்டமைப்புக்கு 1500 மொவோட் மின்சாரத்தை நாம் வழங்கி வருகிறோம்.

இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியால் தேசிய முதலீட்டாளர்களே பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் சிறு மின்னுற்பத்தி நிலையங்களை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது இப்பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சிறு நீர் மின்னுற்பத்தி நிலையங்கள், காற்றாடி மின்னுற்பத்தி மற்றும் சூரியசக்தி மின்னுற்பத்தியாளர்களே மின்கட்டத்தை ஒரு மட்டத்தில் வைத்திருப்பதற்கு பெரும் பங்காற்றியுள்ளனர். எமது கட்டமைப்பால் தேசிய மின்கட்டமைப்புக்கு வழங்கப்படும் 1250 மெகாவோட்ட நிறுத்தப்படுமனால் அதிக விலை கொடுத்தே மின்சாரத்தை பெற வேண்டி ஏற்படும்.




முக்கியமான தருணத்தில்

# ஜி20 தலைமைத்துவத்தை இந்தியா ஏற்றுள்ளது

உலக பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் என ஊடகங்கள் நம்பிக்கை

கொவிட் தொற்று மற்றும் உக்ரைன் யுத்தம் ஆகியவற்றால் கடுமையாக பல உலக நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. உணவு, எரிசக்தி, பசளை என்பன கிடைப்பதில் தட்டுப்பாடு காணப்படுகிறது. உணவு விநியோக சக்தியில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இச் சமயத்தில் ஜி20 அமைப்பின் தலைமைத்துவத்தை இந்தியா ஏற்றிருப்பது முக்கியமானது. இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் நாடுகளை ஒன்றிணைத்து பணியாற்றும் ஆற்றலுடன் இந்தியா விளங்குகிறது என்று 'நியுஸ் ஒன் எயார்' செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

ஜி 20 வரலாற்றிலேயே இப்போது தான் முதல் தடவையாக உறுப்பினர் அல்லாத நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் ஜி 20 செயற்பாடுகளில் இணைந்து உலக விவகாரங்களில் செயற்பட முன்வந்துள்ளன எனக் குறிப்பிட்டுள்ள இச் செய்திச் சேவை, இப்பிரச்சினைகளுக்கு உடனடி மற்றும் நீண்டகால தீர்வுகளை இந்தியா பெற்றுத்தரும் என உலகம் எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதேசமயம், உலகம் பல பிரச்சினைகளை சந்தித்து வரும் இப்பொழுதில் இந்திய தலைமைத்துவம் முக்கியமானது என்று பிஸினஸ் ஸ்டான்டர்ட் பத்திரிகை இந்திய தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தைக் சுட்டிக்காட்டியுள்ளது.

# பி.எம். தர்மலிங்கத்தின் நினைவாக மளிகைப் பொருட்கள் பங்கிடத் திட்டம்



பிரபல சமூக சேவகர் பி. எம். தர்மலிங்கத்தின் முதலாம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு மளிகைப் பொருட்கள் பங்கிடத் திட்டமிடப் பட்டுள்ளது. உடபுசல்லாவ, அலகொல்ல எஸ்டேட்டிலுள்ள பாலமுருகன் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை 22ஆம் திகதி காலை 11மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை மளிகைப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன. அலகொல்ல தோட்ட முகாமையாளர் குணரத்னா முன்னிலையில் இவை வழங்கப்படவுள்ளன.




## Regional Sales Executive
(Eastern Province)

The Associated Newspapers of Ceylon Limited (ANCL), widely known as Lake House, is the home and heart of print media in Sri Lanka. The country's pioneer print media institution having a history of over 100 years and 25 years of online publishing, continues to occupy the number one spot in the print media industry.

Lake House is looking for talented and dynamic individuals who possess the following qualifications and requirements to fill the above vacancy in the Sales Department.

**Required qualifications & requirements**

- A Bachelor's Degree in Management or Commerce from a recognized University or Member of SLIM/CIM or
- Passed GCE (A/L) examination in any stream with at least 4-5 years experience in the field of Marketing or Sales and
- Good communication skills to maintain rapport with our news agents.
- Attribute to sales or marketing will be distinct advantage.
- Should possess a valid driving license at least for light vehicles and vehicle should be registered under the name of the applicant.
- Applicants who reside in the Eastern Province is preferred.

**Age : Below 35 years.**

**Conditions of Employment:**

The appointment will be on contract basis and based on performance the contract period will be renewed.

**Remuneration :**

An attractive and negotiable remuneration package commensurate with the qualifications and experience will be offered to the selected candidate.

**Applications:**

Please send your CV with names and contact details of two non-related referees to the under mentioned address within 7 working days of this advertisement stating the position on the top left hand corner of the envelop or e-mail your CV to the following e-mail address with the position applied for in the subject line.

**Head of Human Capital**
The Associated Newspapers of Ceylon Ltd.
No. 35, D.R. Wijewardene Mawatha, Colombo 10.
hc@lakehouse.lk




# நிஸ்றின் இல்லம் முதலிடம்

**கல்முனை மத்திய தினகரன், பெரியநீலாவணை விசேட நிருபர்கள்**



கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) இல்ல விளையாட்டுப் போட்டியில் சிவப்பு நிற நிஸ்றின் இல்லம் 109 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தை வென்றது.

அதிபர் யூ.எல்.எம். அமீன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாயன்று (17) நடைபெற்ற விளையாட்டுப் போட்டிக்கு அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி. ஜயந்த ரத்நாயக்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதில் 106 புள்ளிகளைப் பெற்ற மஞ்சள் நிற சபரான் இல்லம் இரண்டாம் இடத்தையும், பச்சை நிற வர்தா இல்லம் 104 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் நீல நிற ஜெஸ்மின் இல்லம் 91 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும் பெற்றன.



கெகிராவ கல்வி வலய பலளுவெவ முஸ்லிம் மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியின் மரதன் ஓட்டத்தில் ஐந்து கிலோமீற்றர் தூரத்தை 27 நிமிடங்களில் ஓடி முடித்த ஏழு வயதுடைய இரண்டாம் தர மாணவன் எப்.எம். ருஸ்திக்கு இம்மாதம் 19 ஆம் திகதி இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் பரிசளிப்பு நிகழ்வின் போது வெற்றிக் கிண்ணத்தை வழங்கும் போது எடுத்த படம். *(படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர்)*

### இளையோர் மகளிர் டி20 உலகக் கிண்ணம்:

# இலங்கை அரையிறுதிக்கு முன்னேறுவதில் நெருக்கடி



19 வயதுக்கு உட்பட்ட மகளிர் டி20 உலகக் கிண்ணப் போட்டியின் சுப்பர் 6 சுற்றுக்கு இலங்கை அணி முன்னேற்றம் கண்டபோதும் புள்ளிகள் இன்றியே அந்த அணி அடுத்த சுற்று ஆட்டங்களில் பங்கேற்கவிருப்பதால் அரையிறுதிக்கு முன்னேறுவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

குழு நிலை போட்டிகளில் இலங்கை இளையோர் மகளிர் அணி அமெரிக்காவுடனான போட்டியில் மாத்திரமே வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியபோதும் பங்களாதேஷ் மற்றும் அவுஸ்திரேலிய அணிகளிடம் தோல்வியை சந்தித்ததாலேயே அதனால் சுப்பர் 6 சுற்றில் புள்ளிகள் பெற முடியாமல்போயுள்ளது.

இந்நிலையில் இலங்கை அணி நாளை (22) இந்தியாவை எதிர்கொள்ளவிருப்பதோடு வரும் ஜனவரி 24ஆம் திகதி தென்னாபிரிக்காவுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் இந்தத் தொடரின் இந்த இரு போட்டிகளும் பொட்சஸ்ட்ரூமில் நடைபெறவுள்ளது.

இந்த இரு போட்டிகளிலும் வென்றாலும் இலங்கை அணியால் 4 புள்ளிகளையே பெற முடியும் என்பதோடு சுப்பர் 6 சுற்றில் தான் ஆடும் குழுவில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் ஏற்கனவே நான்கு புள்ளிகளுடன் காணப்படுகின்றன.

சுப்பர் 6 சுற்றில் 6 அணிகளாக பிரிக்கப்பட்ட இரு குழுக்களிலும் முதல் இரு இடங்களை பெறும் அணிகளே அரையிறுதிக்கு முன்னேறும்.

முதல் முறை நடைபெறும் 19 வயதுக்கு உட்பட்ட மகளிர் டி20 உலகக் கிண்ணப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் வரும் ஜனவரி 27 ஆம் திகதி பொட்சஸ்ட்ரூம், சென்வேஸ் பார்க் மைதானத்தில் நடைபெறுள்ளது.

# இந்திய அணிக்கு அபராதம்



நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் ஓவர்கள் வீச நீண்ட நேரம் எடுத்துக்கொண்ட இந்திய அணிக்கு சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் அபராதம் விதித்துள்ளது.

ஹைதராபாத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் 350 ஓட்ட வெற்றி இலக்கை தற்காப்பதற்கு பந்துவீசிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் மூன்று ஓவர்கள் குறைவாக வீசியது. இதனால் இந்திய அணிக்கு போட்டிக் கட்டணத்தில் இருந்து 60 வீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தவறை இந்திய அணித் தலைவர் ரோஹித் ஷர்மா ஒப்புக் கொண்டதை அடுத்து இது தொடர்பில் மேலதிக விசாரணை தேவைப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய அணி முதல் ஒருநாள் போட்டியில் 12 ஓட்டங்களால் வெற்றியீட்டி மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் 1–0 என முன்னிலை பெற்றுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று (21) ரைப்பூரில் நடைபெறவுள்ளது.

# அக்குறணை அல் அஸ்ஹர் அணி இன்னிங்ஸ் தோல்வி



பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்கு உட்பட்ட இரண்டு நாள் போட்டியில் கம்பளை விக்ரமபாகு மத்திய கல்லூரியிடம் அக்குறணை அல் அஸ்ஹர் கல்லூரி இன்னிங்ஸ் மற்றும் 9 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது.

அல் அஸ்ஹர் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட விக்ரமபாகு மத்திய கல்லூரி 49.1 ஓவர்களில் 214 ஓட்டங்களை பெற்றது. நிம்னாத சொய்சா 55 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் எம்.எஸ்.எம் ஹம்தான் 5 விக்கெட்டுகளை பதம்பார்த்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த அல் அஸ்ஹர் கல்லூரி 103 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்ததால் பலோ ஒன் செய்ய வேண்டி ஏற்பட்டது. தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த அந்த அணி 102 ஓட்டங்களுக்கே சுருண்டது.

எனினும் எஸ்.எம் அக்மால் அரைச்சதம் (54) ஒன்றை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது விக்ரமபாகு மத்திய கல்லூரியின் ஜனித் துனுவில இரண்டு இன்னிங்ஸ்களிலும் மொத்தம் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

# மறுமுனை துடுப்பாட்ட வீரரை ரன் அவுட் செய்வதில் கிரிக்கெட் விதியில் திருத்தம்



கிரிக்கெட் விதிகளுக்கு பொறுப்பான மரில்போன் கிரிக்கெட் கழகம் (எம்.சி.சி), மறுமுனையில் இருக்கும் துடுப்பாட்ட வீரரை ரன் அவுட் செய்யும் விதியில் திருத்தம் கொண்டு வந்துள்ளது.

அண்மையில் நடந்த பிக்பாஷ் போட்டியில் டொம் ரொஹஸை, அடம் சம்பா இந்த முறையில் ஆட்டமிழக்கச் செய்ய முயன்றது சர்ச்சையை ஏற்படுத்திய நிலையிலேயே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 3ஆம் திகதி நடந்த இந்தப் போட்டியில் மறுமுனையில் இருந்த துடுப்பாட்ட வீரரை ரன் அவுட் செய்தபோதும், அவர் பந்தை வீசுவதற்கு தயாராக உள்ளார் என்று நம்பும் அளவுக்கு கையை உயர்த்தாததால் அந்த ஆட்டமிழப்பை தொலைக்காட்சி நடுவர் நிராகரித்தார்.

அப்போது நடுவரின் இந்த முடிவு சரி என எம்.சி.சி உடன் கூறியிருந்தது. என்றாலும் பந்துவீச்சாளர் ரன் அவுட் செய்யும்போது அவரது பந்துவீசும் நிலை பற்றி தெளிவு இல்லாமல் இருந்தது.

இந்நிலையில் கிரிக்கெட் விதியின் 38.3 இதனை தெளிவு படுத்துவதாக இருப்பதோடு இந்தத் திருத்தம் கடந்த ஜனவரி 19 ஆம் திகதி உடன் அமுலுக்கு வந்ததாக எம்.சி.சி குறிப்பிட்டது.

இந்த புதிய விதியான 38.3.2 இல் கூறப்பட்டிருப்பதாவது, “பந்துவீச்சாளர் பந்தை சாதாரணமாக விடுவிப்பார் என்று எதிர்பார்க்கப்படும் தருணத்திற்கு முன்னர் மறுமுனை துடுப்பாட்ட வீரர் (கோட்டை விட்டு) வெளியேறினாலும் கூட, பந்துவீச்சாளர் அந்தப் புள்ளியை அடைந்த உடன் இந்த சட்டத்தின் கீழ் மறுமுனையில் இருக்கும் துடுப்பாட்ட வீரரை ரன் அவுட் செய்ய முடியாது.”

இதன்படி பந்து வீசும் தருணத்தில் மறுமுனை துடுப்பாட்ட வீரர் கோட்டை விட்டு வெளியேறும் போதே ரன் அவுட் செய்ய முடியும் என்று இந்தத் திருத்தம் தெளிவுபடுத்தியுள்ளது.

“இந்த சட்டத்தை நடுவர்கள், வீரர்கள் நன்றாக தெரிந்திருந்தபோதும் தெளிவற்ற இடங்கள் இருக்க முடியும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதனால் அதற்கு மேலும் தெளிவை வழங்குவதற்கு 38.3.2 விதியில் திருத்தம் கொண்டுவர நாம் நடவடிக்கை எடுத்தோம்.

பந்துக்கு துடுப்பெடுத்தாடாது துடுப்பாட்ட வீரர் எல்லைக் கோட்டை தாண்டிய பின் பந்துவீச்சாளர் தமது பந்துவீசுவதற்கான செயலை பூர்த்தி செய்தபோதும் அவரை ஆட்டமிழக்கச் செய்ய முடியும் என்று சில வீரர்கள் நினைக்க முடியும். அது ஒருபோதும் சட்டத்தில் அல்லது எம்.சி.சி மூலம் வரையறுக்கப்பட்ட முறையல்ல.

அதேபோன்று இது சட்டத்தை விளக்குவதில் மாற்றம் கொண்டுவரப்பட்டதாக அமையாது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். அது கடந்த ஆறு ஆண்டுகளில் சரியாக விளக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்தத் திருத்தத்தின் மூலம் இது பற்றிய விடயம் தெளிவாகும் என்று எதிர்பார்க்கிறோம்” என்று எம்.சி.சி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# லியோனல் மெஸ்ஸி அணியிடம் ரொனால்டோ அணிக்கு தோல்வி



சவூதி அரேபியாவில் நடைபெற்ற கண்காட்சிப் போட்டியில் கிறிஸ்டியானோ ரொனால்டோ இரட்டை கோல் புகுத்தியபோதும் அவரது ரியாத் நட்சத்திர அணியை மெஸ்ஸியின் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் 5–4 என்ற கோல் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

சவூதித் தலைநகர் ரியாதில் வியாழக்கிழமை (19) நடைபெற்ற இந்தப் போட்டியில் உலகின் மிகச் சிறந்த வீரர்களான மெஸ்ஸி மற்றும் ரொனால்டோ எதிர்கொண்டதோடு இந்த இருவரும் எதிர்கொள்ளும் கடைசி போட்டியாகவும் இது அமையலாம் என்று நம்பப்படுகிறது.

இதில் மெஸ்ஸி முதல் கோலை பெற்றபோதும் ரொனால்டோ இரட்டை கோல் புகுத்த முதல் பாதியில் போட்டி 2–2 என சமநிலை பெற்றது. எனினும் போட்டி ஒரு மணி நேரத்தை எட்டும் நிலையில் இரு வீரர்களுக்கும் பதில் வீரர்கள் அனுப்பப்பட்டனர்.

இந்நிலையில் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணி மேலும் நான்கு கோல்களை புகுத்தி வெற்றியீட்டியதோடு ரியாத் நட்சத்திர அணி கடைசி வரை கடும் சவால் கொடுத்தது. இந்தப் போட்டியை பார்க்க மன்னர் பஹாத் அரங்கில் 69,000க்கும் அதிகமான ரசிகர்கள் கூடியதோடு போட்டியை பார்ப்பதற்கு ஏலத்தில் விடப்பட்ட டிக்கெட் ஒன்றை தொழிலதிபர் ஒருவர் 2.6 மில்லியன் டொலருக்கு வாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 12.7 மில். டொலர் பணத்தை பறிகொடுத்த உசைன் போல்ட்



எட்டு முறை ஒலிம்பிக் தங்கம் வென்ற உலகின் அதிவேக ஓட்ட வீரர் உசைன் போல்ட் ஜமைக்க முதலீட்டு நிறுவனத்தில் வைத்திருந்த 12.7 மில்லியன் டொலர் பணத்தை பறிகொடுத்துள்ளார்.

இது தொடர்பில் அந்நாட்டு அரசு மற்றும் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

“பணம் திரும்பக் கிடைக்காவிட்டால் நாம் நீதிமன்றத்திற்குச் செல்வோம்” என்று போல்டின் வழக்கறிஞரான லின்டன் கோர்டன் குறிப்பிட்டுள்ளார். பணத்தை பறிகொடுத்திருக்கும் போல்டின் வங்கிக் கணக்கில் தற்போது 12,000 டொலர்கள் மட்டுமே உள்ளன.

ஜனவரி 12ஆம் திகதி முன்னாள் ஊழியர் ஒருவர் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாக அந்த முதலீட்டு நிறுவனம் எழுத்துபூர்வமாகத் தெரிவித்தது. எனினும் அது வேறு தகவல்களை வெளியிடவில்லை. இதன்படி முதலீட்டு நிறுவனத்தின் முன்னாள் ஊழியர் ஒருவரே பணத்தை கையாடல் செய்திருப்பதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவருகிறது.

2017 ஆம் ஆண்டு தடகளப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற போல்ட் 11 உலக சம்பியன்சிப் தங்கங்களையும் வென்றுள்ளார். 2008 பீஜிங் ஒலிம்பிக் போட்டியின்போது 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் உலக சாதனை படைத்தார்.

அவர் 100 மீற்றரை 9.572 விநாடிகளில் ஓடிமுடித்த சாதனை தொடர்ந்து முறியடிக்கப்படாமல் உள்ளது.

# Eco Go Beyond பாடசாலை திட்டத்தை இந்தியாவிற்கு விரிவுபடுத்தும் MAS

*Bodyline* தயாரிப்பு பிரிவு, *Intimate Fashions India* திட்டத்தை மேற்கொள்ள உதவி வழங்குகிறது.

இலங்கையின் முன்னணி ஆடை உற்பத்தி நிறுவனமான *MAS Holdings* நிறுவனத்தினால் 15 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட *Eco Go Beyond* முயற்சியானது தற்போது இலங்கைக்கு வெளியே தமது சேவையை விரிவுபடுத்துகிறது, அதன்படி, *MAS Eco Go Beyond sustainable Development Education* திட்டம் இந்தியாவிற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இந்தமுயற்சி தற்போது இலங்கைக்கு அப்பால் சென்று தமது சேவையை மேற்கொளவது இதுவே முதல் முறையாகும்.



காயரம்பேடு அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் நந்திவரம் அரசு ஆண்கள் பள்ளி ஆகிய பாடசாலைகளில் *Eco Go Beyond* திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது, *Intimate Fashions India (Pvt) Ltd, Bodyline Trading (Pvt) Ltd* இன் மூலோபாய வணிகப் பிரிவானது, உற்பத்திப் பிரிவுகளுடன் இணைந்து இந்தத் திட்டத்தை செயல்படுத்தியது. அங்கு, விருது பெற்ற திரைப்பட தயாரிப்பாளரும் கல்வியாளருமான ராம்நாத் சந்திரசேகருடன் மாணவர்கள் அறிவைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு கிடைத்ததுடன், சுற்றுச்சூழல் பேண்தகைமை பிரச்சினைகளை அடையாளம் காண்பதன் மூலம் நடைமுறை அனுபவத்தின் ஊடாக அறிவைப் பெற முடிந்தது.

"MAS இல் எங்கள் செயல்பாடுகளை புரிந்து கொண்ட சமூகங்கள் எங்களது வணிகத்தின் மிகப்பெரிய பலம் என்று நாங்கள் நம்புகிறோம் என்பதுடன் அவர்கள் நமக்குத் தரும் ஒத்துழைப்புடன், அவர்களின் நல்வாழ்வை நாம் உறுதி செய்கிறோம். 15 ஆண்டுகளுக்கு முன்பே நிலையான கல்வி வளர்ச்சியில் முதலீடு செய்ய வேண்டியதன் அவசியத்தை நாங்கள் உணர்ந்துகொண்டதுடன், இதற்குப் பதிலளிக்கும் விதமாக, எங்களின் *Eco Go Beyond* திட்டத்தை நிறுவி, பேண்தகைமையான பாடசாலைகள் திட்டத்தை ஆரம்பித்தோம்.

இந்த முயற்சியை இந்தியாவிற்கு விரிவுபடுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைவதுடன், எங்களின் இந்த புதிய முயற்சியில் நம்பிக்கை வைத்து எங்களுடன் கைகோர்க்கும் புத்திஜீவிகளுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்." என *MAS Holdings* இன் சமூக பேண்தகைமை பிரிவின் பிரதானி திருமதி அமந்தி பெரேரா தெரிவித்தார்.

### தேசிய ஆயுள் காப்புறுதி விருதுகளில்

# இரட்டை தங்கம் வென்ற செலிங்கோ லைஃப்பின் ஏ.ஐ.பி. மஞ்சுள



செலிங்கோ லைஃப்பின் அம்பலாந்தோட்டை கிளையைச் சேர்ந்த சிரேஷ்ட வர்த்தக ஊக்குவிப்பு முகாமையாளர் திரு ஏ.ஐ.பி. மஞ்சுள, அண்மையில் இடம்பெற்ற தேசிய ஆயுள் காப்புறுதி விருதுகளில் நிகழ்வில் பெரிய நிறுவனப் பிரிவில் 'சிறந்த ஆலோசகர்களுக்கான' தங்கம் மற்றும் சிறந்த ஆலோசகருக்கான ஒட்டுமொத்த தங்கம் ஆகிய இரண்டு விருதுகள் 2022 தேசிய ஆயுள் காப்புறுதி ஆலோசகர் மாநாட்டின் போது இலங்கை காப்புறுதி சம்மேளனத்தால் வழங்கப்பட்டது.

செலிங்கோ லைஃப்பின் 2022 ஆண்டு விருதுகளில் ஒட்டுமொத்த சிறந்த விற்பனை ஆலோசகர் பட்டத்தையும் திரு மஞ்சுள வென்றார்.

'சவால்களுக்கு மேலே எழுச்சி: மாற்றம் தொடங்கிவிட்டது' என்ற கருப்பொருளில், தேசிய ஆயுள் காப்புறுதி விருதுகள் 2021, ஹில்டன் ஹோட்டல் கிராண்ட் போல்ரூமில் நடைபெற்றது.




### கொமர்ஷல் வங்கி தொடங்கியுள்ள முதிர்வு அடிப்படையிலான

# வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டம்

வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கும் இலங்கையர்களுக்கு பிரத்தியேகமானதோர் முதலீட்டுத் திட்டத்தை மாதாந்தம் நிலையானதோர் தொகையை சேமிக்கும் வகையில் கொமர்ஷல் வங்கி அறிமுகம் செய்துள்ளது.



பத்தாயிரம் அமெரிக்க டொலருக்கும் அதிகமானதோர் தொகையை அல்லது அதற்கு ஈடான வேறு மூன்று வெளிநாட்டு பணத்திலான தொகையை குறிப்பிட்டதோர் குறுகிய காலப்பகுதிக்குள் சேமிக்கும் வகையில் இந்தத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

'வெளிநாட்டு நாணயத்தில் மில்லியனர் முதலீட்டுத் திட்டம்' என்ற பெயரில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இத்திட்டம் வங்கியின் ஏற்கனவே வெற்றிகரமாகச் செயற்படும் *'Millionaire Investment Plan'* ஐ ஒத்ததாக அமைந்துள்ளது. நிதிச் சந்தையில் உள்ள ஏனைய திட்டங்களோடு ஒப்பிடுகையில் அதிகளவான வட்டி வீதம் மூன்று, நான்கு அல்லது ஐந்து வருடங்கள் அமெரிக்க டொலர், யூரோ, ஸ்டேர்லிங் பவுண், அல்லது அவுஸ்திரேலிய டொலர்கள் மீதான முதலீட்டுக்கு வழங்கப்படுகின்றது.

குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்குள் எவ்வளவு தொகையை சேமிக்க வேண்டும் என்பதை தெரிவு செய்யும் வசதியை இந்தப் புதிய திட்டம் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. நிலையானதோர் மாதாந்த வைப்பு வசதியின் மூலம் இது சாத்தியமாகின்றது. முதிர்ச்சியின் போது முன்னர் குறிப்பிட்ட வெளிநாட்டு நாணயங்களில் 10 000, 25 000, 50 000, 100 000 அல்லது 250 000 என தொகைகளை பெற்றிட முடியும்.

உதாரணமாக ஐந்து ஆண்டுகளில் பத்தாயிரம் டொலர்களை சேமிக்க வேண்டுமாயின், தங்களது விருப்பத் தெரிவுக்குரிய நாணயத்தில் 133.50 டொலர்கள், 146.50யூரோக்கள், 142.75 பவுண்கள், அல்லது 139 அவுஸ்ரேலிய டொலர்களை வாடிக்கையாளர்கள் வைப்பில் இட வேண்டியிருக்கும் என் வங்கி அறிவித்துள்ளது. இந்த விஷேட வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டம் கடல் கடந்த நாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள், உலகில் எந்தவொரு நாட்டிலேனும் வாழும் இரட்டை பிரஜா உரிமை கொண்ட இலங்கையர்கள், இலங்கையில் நிரந்தர வதிவிட உரிமை கொண்டவர்கள், அல்லது வேறு ஒரு நாட்டில் பிரஜா உரிமை பெற்று இலங்கையிலோ வெளியிலோ வாழ்பவர்கள், இலங்கையில் வாழும் வெளிநாட்டு நாணயத்தில் சம்பளம் பெறும் இலங்கையர்கள் ஆகியோருக்க உரியதாகும்.

### இலங்கையின்

# சிறந்த பெருநிறுவன பிரஜையாக HNB தெரிவு



பேண்தகைமை, சிறந்த நிர்வாகம் மற்றும் கூட்டுத்தாபன சிறப்புத்தன்மை ஆகியவற்றில் உண்மையான தலைமைத்துவத்தை ஒருங்கிணைத்த, இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான *HNB PLC*, மதிப்புமிக்க *Ceylon Chamber of Commerce Best Corporate Citizen Sustainability Awards 2022 (CCC BCCSA)* விருது வழங்கும் நிகழ்வில் ஒரு மாபெரும் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான *'Best Corporate Citizen Sustainability Award'*இன் ஒட்டுமொத்த வெற்றியாளராக அறிவிக்கப்பட்ட நிலையில், *HNB BCCSA* 2022 விருது வழங்கும் நிகழ்வில் ஆதிக்கம் செலுத்தியது, சிறந்த 10 *Corporate Citizens* பட்டியலில் இடம் பிடித்தது உட்பட மேலும் 4 கௌரவிப்புக்களைப் பெற்றது – 13 ஆண்டுகளாக *HNB* இந்த கௌரவிப்பை அடைந்துவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

"கடந்த மூன்று வருடங்கள் எமது அமைப்பிற்கு சவால் விடுத்த, இலங்கையின் பொருளாதாரத்தின் நெகிழ்வுத்தன்மையானது எமது மக்களின் மனப்பான்மையை மீண்டும் மீண்டும் சோதித்துள்ளன. ஆயினும்கூட, எங்கள் நிறுவன இலக்குகளை அடைவதற்கான எங்கள் முயற்சிகளில், மிகவும் முக்கியமானவற்றை ஒருபோதும் இழக்காமல் இருக்க ஒரு சிறந்த முயற்சியை மேற்கொண்டோம்: அது குறிப்பாக இலங்கையின் பொருளாதாரத்தின் அடிமட்டத்தில் இருந்து எங்களுடைய பகிரப்பட்ட மதிப்புகள் மற்றும் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான நமது கூட்டுப் பொறுப்பாகும்.

"இன்னும் பல சவால்கள் எமக்கு முன்னால் இருந்தாலும், நாங்கள் இணைந்திருக்கும் சமூகங்கள், வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களுக்கு உதவிக்கரம் நீட்டும் அதேவேளையில், செயல்பாட்டுச் சிறப்பைத் தொடர்ந்து செலுத்துவதற்கான எங்கள் நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். முன்னேற்றத்தில் இலங்கையின் பங்காளியாக நாங்கள் தொடர்ந்து சேவை செய்வோம் – அது சாதகமான நேரங்களிலும் சரி பாதகமான நேரங்களிலும்," என HNBஇன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜொனதன் அலஸ் தெரிவித்தார்.

# Mountain Lion Ventures யிடமிருந்து முதலீட்டை கையகப்படுத்திய Hatch Fund



*Hatch* ஆனது, இலங்கையில் தொடக்கங்கள் தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் ஒரு ஈர்ப்பு மையமாக விளங்குவதில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இலங்கையை மையமாகக் கொண்ட ஆரம்பித்தல் மற்றும் வளர்ச்சியடைதல் *(build up & scale up)* என்பதை நோக்கமாகக் கொண்ட முதலீட்டுக்கான வாகனம் போன்று செயற்படுகின்ற *Mountain Lion Ventures* நிறுவனம், முதன் முதலாக *Hatch Fund* இல் முதலீட்டாளராகவும் மூலதன பாலமாகவும் இணைந்துள்ளது. உள்ளூர் தொடக்க நிறுவன சூழலில் தெரிவுநிலையை உருவாக்கும் *Hatch* இனதும் அவர்களால் இயக்கப்படும் அடைகாத்தல் மற்றும் உத்வேகமளித்தல் திட்டங்களின் மூலம் உலகளாவிய ரீதியில் அளவிடக்கூடிய தொடக்க நிறுவனங்களை அடையாளம் காணும் அதன் திறனுக்கு இது ஒரு உண்மையான சான்றாகும்.

ஒரு நிறுவப்பட்ட தொகுதியினை செயற்படுத்துபவர் எனும் வகையில், உள்ளூர் தொழில்முனைவோருக்கு, குறிப்பாக பெண் தொழில்முனைவோருக்கு, அவர்களின் தொடக்கங்களுக்கான யோசனை வழங்கல், தொடக்கமாதிரி மற்றும் அளவிடுதல் ஆகியவற்றில் மிகப் பொதுவான தடையாக, நிதி மற்றும் சந்தை அணுகல் உள்ளதை *Hatch* அடையாளம் கண்டுள்ளது.

# சிறப்பாக நடைபெற்ற இரத்தினக்கல் ஆபரணக் கண்காட்சி



இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண கண்காட்சி *FACETS Sri Lanka* பிரதம அதிதி கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரனவினால் சினமன் கிராண்ட் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் மற்றும் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையினால் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரதம அதிதி அமைச்சர் பத்திரன, இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில்துறைக்கான அரசாங்கத்தின் திட்டங்களை விரிவாகக் கூறினார், "2023 ஆம் ஆண்டில் 1 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு செயற்படுகிறோம்.

வரி இல்லாத மதிப்பு கூட்டல் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இரத்தினச் சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் பிற தொடர்புடைய தொழில்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை எளிதாக்குவதற்கு ஒரு குழுவும் நியமிக்கப்படும்.

இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கத்தின் தலைவர் அஜ்வர்ட் டீன் மற்றும் *FACETS* தலைவர் அல்தாப் இக்பால் ஆகியோரும் இங்கு உரையாற்றினர்.

வஜிர அபேவர்தன எம்.பி, முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் விராஜ் டி சில்வா, ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் சுரேஷ் டி மெல், இந்தோனேசியா, வியட்நாம், பாலஸ்தீனம் மற்றும் நேபால் நாடுகளின் இராஜதந்திரிகளும் கலந்து கொண்டனர்.

# MMCA இலங்கை அருங்காட்சியகத்தின் 'சந்திப்புகள்' கண்காட்சி



நவீன மற்றும் சமகால கலைக்கான இலங்கை அருங்காட்சியகத்தின் (MMCA இலங்கை) 'சந்திப்புகள்' கண்காட்சியில் பல்வேறு சந்திப்புகளை பார்வையிடலாம். இக் கண்காட்சியின் காட்சி 1 சர்வதேச அரங்கில் இலங்கையின் ராஜதந்திர மற்றும் பூகோள அரசியலின் தொடக்கத்தின் வரலாறை காட்சிப்படுத்துகிறது. இலங்கையின் மைல்கல்களை 1960களிலிருந்து பெறப்பட்ட கலைப் படைப்புகளைக் கொண்டு ஆவணப் படுத்துகிறது.

1955ல் இடம்பெற்ற பண்டுங் கருத்தரங்கம் என்றழைக்கப்படும் முதலாவது ஆசியஆப்பிரிக்க கருத்தரங்கமானது, உலக மக்கள் தொகையில் 54% வீத மக்கள் பிரதிநிதிகளை ஒன்றுகூட வழிவகுத்தது. இக்கருத்தரங்கமானது, சோவியத் ஒன்றியத்தின் ஆதரவாளர்கள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் ஆதரவாளர்களுக்கு மத்தியில் இடம்பெற்ற பனிப்போர் காலத்தில், 1961ம் ஆண்டு உருவாக்கப்பட்ட அணிசேரா இயக்கத்தின் (NAM) தொடக்கத்திற்கு வித்திட்டது. NAM அமைப்பில் இலங்கையும் ஒன்றிணைந்து சுதந்திரத்திற்கு பின்னரான பொருளாதார மற்றும் அரசியல் சிக்கல்களை அங்கீகரிக்கும் பல நாடுகளில் ஒன்றாகியது.

ஆப்ரே கொலெட்டின் (1920–1992) 'The Bandung Conference' (1955) பண்டுங் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களின் கேலிச்சித்திர படைப்பாகும். NAMஇல் கலந்து கொண்ட முக்கிய பிரதிநிதிகளில் இலங்கை பிரதமர் சர் ஜோன் கொத்தலாவல (1897–1980), எகிப்திய பிரதமர் கமால் அப்டெல் நசர் (1918–1970) மற்றும் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவை (1889–1964) காட்ச்சிப்படுத்திகின்றது. வருகை தந்திருந்த 29 அரசியல் பிரதிநிதிகளில், சீனப் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜூ என்லாயையும் (1898–1976) ஆப்ரே கொலெட் காட்சிப்படுத்தியுள்ளார். சீனப் பிரதமரை கடைசியாக நிற்பதாக காட்சிப்படுத்துவத்தினூடாக காலனியநீக்கம், சுய ஆட்சி மற்றும் வன்முறைக்கு எதிரான இலட்சியங்களின் பகுதியான பொருளாதார அபிவிருத்தியை யொட்டிய கலந்துரையாடல்களில் சீனாவின் வளர்ந்துவரும் தாக்கத்தை குறிக்கின்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 21ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.